
Reg No. M. 1725.

சிலம்பு ௯. பரல் ௬



# செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

AUG 1931

உள்ளுறை


மின்சார வல்லுநராகிய தோமாஸ் ஆல்வா எடிசன்

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம் உரை ௨௪௩

தென்புலத்தார் யார்? ௨௪௫

வள்ளுவர் வாய்மொழி கோடல் அல்லது புலவர் நட்பு ௨௫௫

நால்வர்களும் கல்வெட்டுகளும் ௨௬௨

மொழியாராய்ச்சி ௨௭௫

பண்டைத் தமிழ்ச் சொற்கள் ௨௮௩


3L
O31ண211,N26
N31.9.6
199648

The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Ltd.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 3 பிரசோற்பத்தி ஆவணி தனிப் பரல் அணா 5

## ‘செந்தமிழ்ச் செல்வி’ இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

**(Editorial Board Members)**

தலைவர்

1\. திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M. A., M. L.,
*அட்வகேட், தாகூர் சட்ட விரிவுரையாளர்.*

---

2\. ,, பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
*தலைமைத் தமிழாசிரியர், பிஷப் ஹீபர் கலாசாலை, திருச்சி.*

3\. ,, துடிசைக்கிழார். சிதம்பரனாரவர்கள்,
*போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், நாமக்கல்.*

4\. ,, M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B. A.,
*பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.*

5\. ,, பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
*மகிபாலன்பட்டி.*

6\. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள் B. A.,
*வழக்கறிஞர், சாத்தூர்.*

7\. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
*தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.*

8\. ,, பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்,
*அமைச்சர், தென்னிந்திய தமிழ்ச்சங்கம், திருநெல்வேலி.*

9\. ,, அ. மு. சரவண முதலியாரவர்கள்,
*தமிழாசிரியர், லால்குடி.*


---


## பிரசோற்பத்தி வருட
# சைவப் பஞ்சாங்கம்

*கிளேஸ் பிரதி விலை அணா 2.* *ரப் அணா 1½*

குறிப்பு:—1. *தனிப்பிரதி வேண்டுவோர் 1-அணா தபாற்றலையுஞ் சேர்த்தனுப்புதல் வேண்டும்.*

2\. *வியாபாரிகட்குத் தக்க கழிவு தரப்படும்.*

3\. *முன் 7 ஆண்டுப் பஞ்சாங்கமும் கிடைக்கப் பெறும்.*



மின்சார வல்லுநர் தோமாஸ் ஆல்வா எடிசன்

5-AUG 1931

ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றுந்

திங்கள்தோறும் வெளிவருவது.

சிலம்பு ௯ } மெய்கண்டான் யாண்டு-௭௱௮ ஆனித்திங்கள் 1931ஆ ஜூன்—ஜூலை மீ { பரல் ௬

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

ஏறி லெருதேறு மெழிலா யிழையோடும்
வேறும் முடனுமாம் விகிர்த ரவரென்ன
நாறும் மலர்ப்பொய்கை நல்லூர்ப் பெருமானைக்
கூறும் மடியார்கட் கடையா குற்றமே.

ஏறி லெரு தேறும்=ஏறினல் எருதினையே ஊர்தியாகக்கொண்டு ஏறுகின்றவனும்

எழிலாயிழை=ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை அணிந்த அழகுடைய உமாதேவியாரோடு

ஓடும் (ஆம்)=ஒன்றாகியும்

வேறும் (ஆம்)=வேறாகியும்

உடனும் ஆம்=உடனாகியும் இருக்கின்றவனுமாயுள்ள

விகிர்தரவர் என்ன=(தமது உண்மையியலிலிருந்து வேறுபட்ட பொது இயலில்) பல்வேறு வடிவமுடையவர் என்று

நாறும் மலர்ப்பொய்கை=மணம் வீசுகின்ற பூக்கள் நிறைந்த பொய்கையினை உடைய

19648



நல்லூர்ப் பெருமானை = திருநல்லூரில் திருமேனிகொண் டருளியிருக்கும் முதல்வனை

...றும் அடியார்கட்கு = துதித்துப் புகழ்கின்ற அடியார்களுக்கு

குற்றம் = மலத்தினாலாகிய குற்றங்கள்

அடையா = அடையாவாம்.

இந்தத் தேவாரப் பாட்டு இறைவன் இறைவியுடன் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் கலந்திருக்கின்ற (பொதுவியல்) அத்துவிதத்தைக் கூறுகின்றது. ஏறி வெரு தேறும் என்பது இறைவனுக்கு அற வடிவாயுள்ள ஏறொன்றே சிறப்பான ஊர்தியாக இருத்தலால் ஏரு தேறும், என்று கூறாமல் ஏறி வெரு தேறும் என்று கூறினார். திருநாவுக்கரசு சுவாமிகளும் "அயிராவணமேறா தானேறேறி" என்றார்.

எழில் ஆயிழை என்றது உமாதேவியார் அழகுக் கொருவரு மொவ்வாதவர் என்றபடி. "அழகுக் கொருவரு மொவ்வாத வல்லி" என்று அபிராமி பட்டர் அபிராமி அந்தாதியிற் கூறினார். ஓடும் வேறு முடனும் என்பது ஒன்றாய் வேறாய் உடனாய் என்ற மூன்று வகை அத்துவித இயைபுகளையும் குறிக்கின்றது.

விகிர்தர்—விகிர்தம் (**विकृत**) என்ற வடமொழிச் சொல் வேறுபாடு அல்லது மாறுபாடு (Change) என்று பொருள் படும். (**विकृ**) என்ற அடிச் சொல் மாறு (to Change) என்ற பொருளைக் குறிக்கும். விகிர்தர் என்பது வேறுபட்ட பல வடிவங்களை யுடையவர் ஆகும்.

இறைவன் இறைவியோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் கலந்து நிற்கிற பொது இயல் (தடத்த இலக்கணம்) நிலையில் பல வடிவங்களை உடையவர் ஆகின்றார் என்பது குறிக்கப்பட்டது. குற்றம் பால்பகா அஃறிணைப் பெயர். அது மலச் சேர்க்கையா லுண்டாகிய பலவகைக் குற்றங்களை உணர்த்துதலால் "அடையா" என்னும் பன்மை வினைகொண்டது.

மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

---



# தென்புலத்தார் யார்?

(ஆசிரியர் மறைமலையடிகள் எழுதியது)

சென்ற தைப்பூச நாளன்று பல்லாவரத்தில் நடைபெற்ற பொதுநிலைக் கழக இருபதாம் ஆண்டுவிழாப் பேரவையில் திருவாளர் கி. குப்புசாமி முதலியாரவர்கள் "தென்புலத்தார் தெய்வ" மென்னுந் திருக்குறளிற் போந்த தென்புலத்தா ரென்னுஞ் சொல்லுக்குப் பரிமேலழகியார்உரையைத் தழுவி உரைத்த கொள்கையினை யாம் உடன்படாது, அச்சொல்லுக்கு வேறு பொருள் கூறினேமாக, அதுபற்றி அறிஞர்க்குள் வழக்கு நேர்ந்ததாகலின், யாம் கொண்ட கருத்தினை நன்கு விளக்கிக் காட்ட வேண்டுமென அன்பர் பலர் கேட்டுக்கொண்டதற் கிணங்கி, அதனை இங்கே இயன்றமட்டும் விளக்குவான் புகுந்தேம்.

தென்புலத்தா ரென்பதற்குப் பரிமேலழகியா ருரைத்த பொருள் இது: "தென்புலத்தார் பிதிரர்; பிதிரராவார் படைப்புக் காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி; அவர்க்கு இடம் தென்றிசையாதலின் தென்புலத்தா ரென்றார்."

இனித், தெற்கே குமரிநாடு இருந்தகாலத்து அதன்கண் ஓடிய பஃறுளி யாற்றங்கரையை யடுத்த பெருநாட்டில் அரசு செலுத்திய பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி மேலதாக வைத்து நெட்டிமையார் என்னும் நல்லிசைப் புலவர் பாடிய "ஆவுமானியற் பார்ப்பனமாக்களும்" (புறநானூறு, ௯) என்னுஞ் செய்யுளினும்,

"தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்"

என்று தென்புலம் வாழ்நர் குறிக்கப்படுகின்றனர். இச் செய்யுளுக் கெழுதப்பட்ட பழைய உரையில் தென்புலம் வாழ்நர் என்பதற்குத் "தென்றிசைக்கண் வாழ்வோராகிய நுங்குடியிலிறந்தோர்" என்பது பொருளாக எழுதப்பட்டிருக்கின்றது.

தென்புலத்தார் என்னுஞ் சொல்லுக்குப் பரிமேலழகியார் உரைத்த பொருளும், புறநானூற்று உரைகாரர் உரைத்த பொருளும் ஒன்றோடொன்று ஒவ்வாமல் மாறுபட்டு நிற்றல் மேலே காட்டிய அவ்விருவருரைகளையும் ஒத்து நோக்குவார்க்கு நன்கு விளங்கும்.

இனி, இவ் விருவேறு உரையுள் எஃது அச்சொற்பொருள் உண்மை யறிவிப்பதென்பது ஆராயற்பாற்று. இந்நிலவுலகமெங்கணுமுள்ள மக்கட் கூட்டத்தாரிற், பண்டுதொட்டு நாகரிகத்திற் சிறந்தார் முதல் அதிற் சிறவாதார் ஈறாக எல்லா வகுப்பினரும் இறந்துபட்ட தத்தம் முன்னோர்களை நினைந்து வழிபாடாற்றி வந்திருக்கின்றனர். தம் முன்னோரை நினைந்து வழிபடாத ஒரு வகுப்பினரை யாண்டுங் காண்டல் இயலாது. எங்குமுள்ள மக்களின் இவ்வியற்கை வழக்கத்துக்கு இசையவே நம் பண்டைத் தமிழ்மக்களுந் தம்மை நாகரிக வாழ்க்கையில் வாழச் செய்த தம் முன்னோரை நினைந்து வழிபாடு செய்துவந்தனர்; இவர் அங்ஙனந் தம் முன்னோரை வழிபட்டு வந்த குறிப்புப் புறநானூற்றுரைகாரர் "தென்றிசைக்கண் வாழ்வோராகிய நுங் குடியில் இறந்தோர்" என்றுரைத்த வுரையால் தெற்றென விளங்காநிற்கின்றது.

மற்றுப், பரிமேலழகியார் உரைத்த உரையோ தமிழரில் இறந்துபட்ட முன்னோரைக் குறியாதாய்த், 'தென்புலத்தார்' என்பதற்குப் 'பிதிரர்' என்று பொருள் கூறி, "அப்பிதிரராவார் படைப்புக் காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி" என்றும், "அவர்க்கிடந் தென்றிசை" என்றும் அவர் வரலாறு விரித்தது. எனவே, பிதுரர் என்பார் தமிழரின் இறந்துபட்ட முன்னோரல்லரென்பதூஉம், அவர் நான்முகனாற் படைப்புக்காலந்தொட்டே படைக்கப்பட்டுத் தென்றிசைக்கண் வாழும் ஒரு கடவுள் வகுப்பினராவரென்பதூஉம் பரிமேலழகியார் கருத்தாகின்றன. ஆனால், வடநூல்களிலோ பிதுரரைப் பற்றிய வரலாறு பரிமேலழகியார் கூறியபடி காணப்படவில்லை. அரிவம்சத்திலும் வாயுபுராணத்திலும் அவர் வரலாறு இங்ஙனம்



சொல்லப்படுகின்றது: "தேவர்கள் நான்முகனை வணங்காது இகழவே, அவன் அவர்களைப் பேதையராகும்படி வைதான்; அது கண்டு அவர் தாஞ் செய்த பிழையைப் பொறுக்கும்படி வேண்ட, அவன் அவர்களை நோக்கி 'நீவிர் நும்புதல்வர்பால் அறிவு பெறக்கடவீர்' என்று ஏவினான். அங்ஙனமே அத்தேவர்கள் தம் புதல்வர்பாற் றவச்சடங்குங் கழுவாய்ச் சடங்குங் கற்றுணர்ந்து அங்ஙனங் கற்றுணர்ந்தமை நோக்கித் தம் புதல்வர்களையே 'பிதுரர்' என வழங்கினார்; அக் காரணம் பற்றியே தேவர்களின் புதல்வர்கள் முதற்பிதுரராயினர்." ஏனைய புராணங்களும் பிதுரர் வரலாற்றை இவ்வாறே நுவல்கின்றன. ஆனால், மனுஸ்மிருதியோ, இரணியகருப்பன் மகன் மனு; அவன் புதல்வர்களான விராஜர், மரீசி, அத்திரி, பிருகு, ஆங்கிரசர், புலத்தியர், வசிட்டர் முதலான ஏழு முனிவர்களின் மக்களே 'பிதுரர்' ஆவரென்றும், இவர்கள் எழுவகைக் கூட்டத்தினராய்ச் சாத்தியர்களுக்கும் அக்நிஷ்வாத்தர்களுக்கும், தைத்தியர் தானவர் இயக்கர் கந்தருவர் நாகர் இராக்கதர் சுபர்ணர் கின்னரர்களுக்கும், பிராமணர்களுக்கும், க்ஷத்திரியர்களுக்கும், வைசியர்களுக்கும், சூத்திரர்களுக்கும் பிதுரராவரென்றும் நுவலாநிற்கின்றது (௩, ௧௯௪-௧௯௭). இந் நூல்களிலாதல், ஆபஸ்தம்பர் கௌதமர் வசிட்டர் போதாயனர் இயற்றிய தருமசூத்திரங்களிலாதல், சாங்காயனர் ஆஸ்வலாயனர் பாரஸ்கரர் காதிரர் கோபிலர் இரணியகேசின் ஆபஸ்தம்பர் இயற்றிய கிருகிய சூத்திரங்களிலாதல் மேற்கூறிய 'பிதுரர்' தென்புலத்தில் உள்ளவராகக் குறிப்பிடப்படபடவில்லை.

இனி, இந்நூல்களுக்கும் வடமொழியில் உள்ள மற்றெந் நூல்களுக்கும் முற்பட்டதாகிய இருக்குவேதமானது எவரைப் பிதுரர் என்று கூறுகின்றதென்பதைச் சிறிது ஆராய்வோம். இருக்குவேதப் பத்தாம் மண்டிலத்தின்கண் உள்ள பதினைந்தாம் பதிகமானது பிதுரர்கண்மேற் பாடப்பட்டிருக்கின்றது. அதனைப் பாடிய பண்டை ஆரியர் இறந்துபோன தம் முன்னோரையே பிதுரர்களாக விளித்துப் பாடியிருக்கின்றனர்; அவர்

பாடிய அப்பதிகத்தின் சில பகுதிகளை இங்கே மொழிபெயர்த்துத் தருகின்றோம்:-

“சோமபானத்தில் ஒருகூறு பெறுதற்குத் தக்காரான மூதாதைகள்
கீழுள்ள நடுவுள்ள மேலுள்ள உலகட்கு மேலெழுக!
ஆவிவடிவத்தைப் பெற்ற அவர்கள் அமைதியும் அறமுமுடையராய்
யாம் அழைக்குங்கால் வந்து எமக்கு உதவிசெய்க! (௧)

முன்னரே இறந்துபோனோரும், அவர்க்குப்பின்னர் இறந்துபோனோரும்
இம் மண்ணுலகத்திற்கு அணித்தாகத் தங்கினோரும்,
வல்லரான தேவர்களிடையே தங்குவோரும் ஆகிய
மூதாதைகளுக்கு இவ்வணக்கத்தைச் செலுத்துவோமாக! (௨)

சோமநறவைப் பெறுதற்குத் தக்காரான, எங்கள் சோமவிருந்திற்குச்
சிறப்புடன் வந்தோரான எங்கள் பழைய மூதாதைகளுடன்
விழைவுடையாரொடு விழைவுடையனாய்க் களிப்புடையனாய்
இயமன் தான்வேண்டியபடி யாயிடும் அவியுணவை அயில்க! (௮)

ஓ தீக்கடவுளே, ஒளியுலகில் உறைபவராய், முதற் பிறந்தவராய்,
இறைவனை வழுத்துபவராய்
அவியுணவை அயில்பவரும் பருகுபவருமாய், மெய்ம்மையுடையராய்த்,
தேவர்களோடும் இந்திரனோடும் இயங்குபவராய் உள்ள எம்
எண்ணிறந்த பண்டை மூதாதைகளுடன் நீ வருக! (௰)

ஓ ஜாதவேதனே, இங்கு வந்தவரும் வராதவரும், யாம் அறிந்தவரும்
அறியாதவரும் ஆன மூதாதைகள் இத்துணைய ரென்பதை
நீ நன்குணர்வை;அவரவர் பங்குக்கென்று நன்குசமைத்துவைக்கப்பட்ட
இவ் வேள்வியை ஏற்றுக்கொள்க! (௧௩)

தீயில் எரிக்கப்பட்டவரும், எரிக்கப்படாமற் புதைக்கப்பட்டவரும்
ஆன அவர்கள் வானுலகின் நடுவில் தாம் பெறும் அவியுணவி
னாற் களிகூர்கின்றார்கள்;
ஓ முதல்வனே, அவர்கட்கு ஆவியுலகத்தையும்,அவர்கட்குரிய
ஆவியுடம்பையும், நின்னுள்ளம் வேண்டியபடியே ஈந்திடுக!” (௧௪)

இங்ஙனம் போந்த பழைய இவ் இருக்குவேதப் பதிகத்தில், ஆரியரின் மூதாதைகளே “பிதுரர்” ஆதலும்; அவர்கள் தாந் தாஞ் செய்த நல்வினை தீவினைக்கேற்ப இறந்தபின் இம் மண்ணு



லகத்திற்கு அணிமையினும் இதற்குமேல் நடுவணதான வானுலகினும் அதற்குமேலுள்ள துறக்கவுலகினுஞ் சென்று வைகுதலும்; அவர்தம் மூதாதைகள் இறந்தஞான்று அவர்களுள் ஒரு பகுதியாரை நெருப்பிலிட்டு எரித்தும், மற்றொரு பகுதியாரை மண்ணின் கீழிட்டுப் புதைத்தும் வந்தனரென்பதால் அப் பிதுரர், பரிமேலழகியார் கூறியபடி “அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி” யாகாமையுந் தெற்றென விளங்காநிற்கும். ஆரியரின் மூதாதைகளான அப் பிதுரர்கள், இயமன் உலகத்தினும் பகலவன் உலகத்தினுந் திங்கள்உலகத்தினுஞ் சென்று வைகுவரென அவ்விருக்குவேத ஒன்பதாம் மண்டிலத்தில் ௧௧௩-ஆம் பதிகத்து அ, கூ, ௰ ஆஞ் செய்யுட்கள் மொழிகின்றனவேயன்றி, அவர் தென்புலத்ின்கட் சென்று வைகுவரெனக் கூறுகின்றில. மேலும், ஆரியர் தம்மைச் சேர்ந்தார் உயிர்துறக்குங்கால் இயமனை வேண்டிப் பாடிய பதிகத்தில், இறந்து செல்வோன் உயிரைநோக்கி,

“ஓடுக! சரமாவின் குட்டிகளும், பழுப்புநிறத்தோடு பல்வரிகளையுடையனவும் நான்கு கண்கள் வாய்ந்தனவும் ஆகிய இரண்டுநாய்களையும் நின் இனிய வழியினிடையே விரைந்து கடந்துசெல்க!
இயமனுடன் கூடி மகிழ்ந்திருப்பாரான இரக்க நெஞ்சமுள்ள மூதாதைகள்பால் விரைந்து அணுகுக!”

(இருக்குவேதம், ௰, ௧௪, ௰) என்று கூறுதல் கொண்டுந், தம் மூதாதையர் இயமனுலகத்திற்குச் செல்வதாகப் பண்டையாரியர் நம்பிவந்தமை நன்கு புலனாகாநிற்கும். இயமன் தென்புலத்திற்கு உரியவனாகப் பிற்காலத்தெழுந்த வடநூல்கள் நுவலுங் கதை, பண்டை வடநூலாகிய இருக்குவேதத்தில் யாண்டுங் காணப்படாமை கருத்திற் பதிக்கற்பாற்று. அவர் சென்று வைகும் இயமனுலகு, வானநாட்டின் நடுவண் உள்ளதாகவே முன்னர்க் காட்டிய ௧௫-ஆம் பதிகத்தின் ௧௪-ஆஞ் செய்யுள் ஐயமறவோதுதல் காண்க.

இன்னும் அவ் இருக்குவேதப் பத்தாம் மண்டிலத்தின் பதினாறாம் பதிகத்து ௩- ஆஞ் செய்யுளானது இறந்து செல்லும் ஒருவனுயிரை நோக்கிக் கூறுகின்றுழிப்,

"பகலவன் நின் கண்களைப் பெறுக; காற்று நின் உயிர்ப்பைப்
பெறுக; நின் வினைப்பயனுக்குத்தக மண்ணுலகத்திற்கோ
விண்ணுலகத்திற்கோ நீ செல்க!
நின்வினை அங்ஙனமாயின் நீ நீரினுட் செல்க; அல்லது செடிகளினுட்
புகுந்து, நின் உறுப்புக்கள் எல்லாவற்றுடனும் ஆண்டு வைகுக!"

என்றுரைக்குமாற்றால், நல்வினைசெய்த உயிர் விண்ணுலகத்திற் சென்று வாழுமென்பதும்; நல்வினைசெய்யாத உயிர் மண்ணுலகத்தை யடுத்துப் பேய்களாக அலைந்து திரிதலே யல்லாமல், நீரினுட் புகுந்து நீரணங்காகவுங் கானகத்துள்ள செடிகளினூடே புகுந்து காட்டணங்காகவும் உறையுமென்பதும் பண்டையாரியர்தம் நம்பிக்கையாதல் நன்கு புலனாகின்ற தன்றோ? இங்ஙனமெல்லாம் இறந்துசென்ற உயிர்கள் வைகும் இடங்கள் வான் நடுவணதான இயமனுலகும், ஞாயிறு திங்களுலகும், மண்ணுலகும், மண்ணுக்கும் விண்ணுக்கும் நடுவணதாம் உலகும், நீருங் காடுமேயாம் என இருக்குவேதம் நுவலக் காண்கின்றனமேயன்றி, அது தென்புலம் என நுவலுதலை அதன்கண் யாண்டுங் கண்டிலேம். அது நிற்க.

இனிப், பிதுரரை ஒரு கடவுட்சாதியென்று கூறிய பரிமேலழகியாருரை ஒரு சிறிதும் பொருந்தாமை இருக்குவேத ஆராய்ச்சியால் தெற்றென விளங்குதலும் ஈண்டுக் காட்டுவாம். தேவர்கள் இயங்கும் நெறியையும், இறந்து செல்லும் பிதுரர்கள் இயங்கும் நெறியையும், இருக்குவேதப் பத்தாம் மண்டிலப் பதினெட்டாம் பதிகத்து முதற்செய்யுளும், இரண்டாம் பதிகத்து ஏழாஞ் செய்யுளும் முறையே,

"ஓ மிருத்யுவே, தேவர்கள் வழக்கமாய்ச் செல்லும் நெறியை
அகன்று, நினக்குத் தனியேயுரிய நெறியின்கண் இங்கிருந்து
புறப்பட்டுச் செல்க!"

என்றும்,

"அங்கியே, பிதுரர்கள் செல்லும் நெறியை நன்குதெரிந்து கொண்டு,
அதன் நெடுகச் சுடர்ந்தெரிந்து பேரொளி விளக்கத்தைச்செய்க!"

என்றும் வேறுவேறு கூறுதலை உற்றுநோக்கவல்லார்க்குப், பண்டை ஆரியர்கள் தேவரையும் பிதுரரையும் வேறுவேறாகக் கருதினரே யல்லாமற், பிதுரரையுந் தேவராகக் கருதிற்றிலரென்னும் உண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்குவிளங்காநிற்கும். ஆகவே, பண்டையாரியர் இயற்றிய வேத வழக்குக்கு முற்றும் முரணாகப், பிதுரரைத் தேவரென்றுரைப்போர் வேதவழக்கைத் தழுவிய 'வைதிக' ராதல் யாங்ஙனம் என மறுக்க.



இருக்குவேதத்தை எழுத்தெண்ணிப் பயின்றவரும், அதனை முதன் முதல் அச்சிற் பதிப்பித்து, அதன் பதிகங்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த் துதவியவருமான மாக்ஸ்மூலர் என்னும் ஆசிரியர் ( Professor Max Muller ), "வேதத்தில் மூதாதையர் அல்லது பிதிரர் தேவர்களுடன் சேர்த்து வழுத்தப்படுகின்றனர்; என்றாலும், அவர்கள் மற்றவருடன் ஒன்றாகவைத்து மயங்கக் கூறப்படவில்லை. தேவர்கள் பிதுரர்களாதல் எஞ்ஞான்றும் இல்லை. மனுவினாலும் யாஞ்ஞியவற்கியராலும் பிதுரர்கள் ஓரோவொருகாற் பண்டைத் தேவ வகுப்பினர்நிலைக்கு உயர்த்தப்பட்டுத் 'தேவ' என்னும் அடைமொழியால் வழங்கப்படினும், பிதுரருந் தேவருந் தனித் தனித் தோற்றமுடைய ரென்பதும், மக்கள் உள்ளமானது தான் வழிபடுதற்கென்று வகுத்துக்கொண்ட இருவேறு நிலைகளைக் குறிப்பவரென்பதும் நாம் எளிதிற் காண்டல் கூடும். இஃது என்றும் மறக்கப்படாத ஒரு பாடமாக இருத்தல்வேண்டும். இருக்குவேத ௰-ஆம் மண்டிலத்து ௫௨-ஆம் பதிகத்தின் ௪-ஆஞ் செய்யுளில் இங்ஙனங் காண்கின்றோம்:

"மேலெழுகின்றவிடியற்காலம்என்னைக்காப்பதாக! ஓடுகின்றயாறுகள் என்னைக் காப்பனவாக! திண்ணியமலைகள் என்னைக்காக்க!
தேவர்களை அழைக்கும் இப்போது பிதுரர்கள் என்னைக்காப்பாராக!

இச்செய்யுளில், விடியற்காலமும் யாறுகளும் மலைகளுந் தேவர்கள் வணக்கவுரையிற் சேர்த்துச் சொல்லப்படினும், அவற்றின் வேறான இருப்பு உடையாராகப் பிதுரர்கள் நுவலப்படுதல் இனிது விளங்குதல் காண்க.

"இதுவேயுமன்றி, மூதாதையருள்ளுந் துவக்கத்தி லிருந்தே இருவேறு வகையினர் கருதப்படுதலும் நாம் பகுத்துணர்ந்துகொள்ளவேண்டும்; அவருள் ஒரு பகுதியார் நெடுங்காலத்துக்கு முன்னரே இறந்துபோகி அரைவாசி மறக்கப்பட்டவர்களாய்ச், சில குடும்பங்களின் உண்மையில் இல்லாத மூன்னோராவர், அல்லது, வேதநூற் புலவரின் கருத்துப்படி மக்கட்டொகுதி முழுதுமேயாவர்; மற்றொரு பகுதியார் சிறிது காலத்திற்கு முன்னரே இறந்துபோகி, இன்னும் பின்னுள்ளோரால் நினைந்து பணியப்படுவோ ராவர்.

"மிகப் பழைய மூதாதையர் பொதுவாகத் தேவர்களுக்கு அணுக்கராவர். இறந்துசென்ற உயிர்களுக்கு அரசனான இயமன்றன் உலகத்திற்குச்சென்று, அங்கே அவர்கள் தேவர் சிலருடன் கூடியிருப்பவராக அடிக்கடி நுவலப்படுகின்றனர். (இருக்குவேதம், ௭, ௭௯, ௪, தேவாநாம் சதமாதா; இருக்குவேதம், ௰, ௧௯, ௨, தேவாநாம் வசநீ:)

"இன்னும், பாட்டனுக்குப் பாட்டனுவார் துறக்கவுலகையும், பாட்டன்மாராவர் வானுலகையுந், தாதையர் மண்ணுலகையுஞ் சார்ந்திருப்பவராய், முதற்சொன்னவர் ஆதித்தியருடனும், இரண்டாவது சொன்னவர் உருத்திரருடனுங், கடைசியிற் சொன்னவர் வசுக்களுடனுங் கூடியிருப்பவராகக் கூறப்படுதலைச் சிலகாற் காண்கின்றேம்.

"இயமனை பிதுரரில் ஒருவனாக வைத்து வழுத்தப்படுதலுடன், அவன் மக்களுள் முதன் முதல் இறந்தவனென்றும், மூதாதையர் செல்லும் நெறியாகி மேற்றிசையிற் பகலவன்மறையுமிடத்துக்குச் செலுத்தாநின்ற 'பிதிரியானத்'தை மிதித்தவனுவன் என்றும் வழுத்தப்படுகின்றான்; (இருக்குவேதம், ௰, ௨, ௭; ௰, ௧௪, ௧-௨), அவன் வைவசுவதன் என்றும் (௰, ௫௮, ௧), வைசுவதன் மகன் என்றுஞ் (௰, ௧௪, ௫) சொல்லப்படுகின்றான். பின்வந்த அதர்வவேத 'காலத்தில் இயமன் மக்களுள் முதற் றோன்றியவனாகச் சொல்லப்படுகின்றான் (அதர்வவேதம்,



௧௮, ௫, ௧௫; இருக்குவேதம், ௰, ௧௪, ௧-உடன் ஒத்துநோக்குக)"*

என்று மாக்ஸ்மூலர் என்னும் ஆசிரியர் கூறுதல்போலவே, வேதநூலாராய்ச்சி வல்ல கீத் (A. B. Keith) என்னும் அறிஞருந், "தேவர்கள் நெறியானது பிதுரர்கள் நெறியின் வேறுவதென்றே அடுத்தடுத்துச் சொல்லப்படுகின்றது; வழியில் நாய்கள் இருக்குமென்பதனால் அந்நெறியானது தனிப்பட்டதென்பதும், அமைதிவாய்ந்த தேவநெறி யாகாதென்பதும் புலனாகின்றன."† என்று பெரிதாராய்ந் தெழுதியிருக்கிறார்.

மேலே மாக்ஸ்மூலர் ஆராய்ந்துரைத்த பகுதியாற், பிதுரர் இருவகையினராய், நெடுங்காலத்துக்கு முன்னரே இறந்துபட்டு அவருக்குப்பின் வந்தாரால் மறக்கப்பட்டவரும், பிற்காலங்களில் இறந்துபட்டுப் பின்னுள்ளாரால் நினைவுகூரப்பட்டவரும் ஆதலும், அவர் துறக்கம் வான் நிலம் என்னும் உலகுகளைச் சார்ந்து வைகுவார் ஆதலும்; பிதுரர்களுக்குத் தலைவனான இயமனை பண்டொருகால் மக்களுள் ஒருவனாய் இருந்து முதன் முதல் இறந்துபட்டோனாதலும்; அவனும் பிதுரரும் இருக்குமிடம் பகலவன் மறையும் மேற்றிசைக் கண்ணதாதலும் நன்கு புலனாகின்றன. இவை யவ்வளவும் இருக்குவேதப் பதிகங்களால் ஐயமறத் தெரிக்கப்படுமாறும் மேலே அவைதம்மை எடுத்துக்காட்டி விளக்கியிருக்கின்றேம். எனவே, பிதுரராவார் "அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி" என்றும், "அவர்க்கிடந் தென்றிசை" என்றும் பரிமேலழகியாரும் அவரைப் பின்பற்றினாருங் கூறும் உரை, அவர்தாம் இறைவன் நூலாகக்கொண்ட பண்டை ஆரிய இருக்குவேத வுரைக்கே முற்றும் மாறாய் நிற்றல் கண்டுகொள்க.

---

*Prof. Max Muller's 'India What Can It Teach Us?,' pp 222—223

†'The Religion and Philosophy of the vedas and Upanishads,' by A. B. Keith, D. C. L., D. Litt., p. 411

இனி, வடக்கிருந்த ஆரியர்கள் இறந்துபோன தம் முன்னோரை நினைந்து வழிபட்டு வந்தாற்போலவே, தெற்கிருந்த தமிழர்களும் பண்டிருந்த தமது குமரிநாட்டின்கண் நாகரிகத்திற் றலைசிறந்தாராய் வாழ்ந்துசென்ற தம் முன்னோரை நினைந்து வழிபட்டு வந்தாராகல் வேண்டுமென்பது, தொடக்கத்தில் எடுத்துக்காட்டிய “ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்” என்னும் பழைய புறநானூற்றுச் செய்யுளிற் போந்த “தென்புலம் வாழ்நர்” என்னுஞ் சொற்றொடராலும், “தென்றிசைக்கண் வாழ்வோராகிய நுங் குடியில் இறந்தோர்” என்னும் அதன் பழைய வுரையாலும் நன்கு புலனாகின்ற தன்றோ? பண்டைநாளிருந்த ‘குமரிநாடு’ இப்போதுள்ள குமரிமுனைக்குத் தெற்கே பெரும்பரப்பினதாய் இருந்தமையும், அதன்கட் பல்லாயிர ஆண்டுகட்குமுன் உயிர்வாழ்ந்த பழந்தமிழ் மக்கள் இம்மை மறுமைக்குரிய எல்லாத் துறைகளிலும் நாகரிகத்திற் றலைசிறந்து நின்றமையும், அந் நாட்டின்கட் செங்கோலோச்சிய நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்தே தொல்காப்பியம் என்னும் ஒப்புயர்வற்ற செந்தமிழ்த் தனி முதல்நூல் அரங்கேற்றப்பட்டமையும், அஞ்ஞான்றிருந்த செந்தமிழ் மக்களின் நாகரிகத்திலிருந்தே பிறநாடுகளிலிருந்த ‘ஆரியர்,’ ‘பாரசிகர்,’ ‘எபிரேயர்’ முதலான ஏனை மக்கட்பிரிவின ரெல்லாருஞ் சிறிது சிறிதாக நாகரிகம் இன்னதெனத் தெரிந்து சீர்திருந்தினமையும், இன்னும் இதனை யொட்டிய பிற வரலாற்றுக் குறிப்புகளும் மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும் என்னும் எமது பெருநூலில் விரித்து விளக்கியிருக்கின்றேம். அத்துணை நாகரிகத்திற் சிறந்த பண்டைத் ‘தமிழ்மக்கள், தாம் இருந்த தென்புலமாகிய தமிழகத்தில் தமக்கு முன்னரே நாகரிகமுடையராயிருந்து இறந்துபோன தம் மூதாதைகளையே ‘தென்புலத்தார்’ என வழங்கி வழிபட்டு வாழ்ந்து வந்தனரன்றித், தமக்கு ஏதொரு தொடர்பு மில்லாத ஆரியர்தம் மூதாதைகளாகிய ‘பிதுரர்’ களையாதல், இற்றைக்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் ஆரியக் குருக்கண்மாராலுங் கட்டி குருக்கண்மாராலுந், தமிழ்நாட்டுக் குருக்கண்மாராலுங் கட்டி யெழுதப்பட்ட புராணங்களிற் புதிது புகுந்த அயன் படைப்பான ‘பிதுரர்’களையாதல் வணங்கிவந்தவ ரல்லர். ஆரியக் குருக்கண்மார் புதிது கட்டிய கட்டுப்பாட்டில் அகப்பட்டுத் ‘திவசங்’ கொடுக்கின்ற இஞ்ஞான்றைத் தமிழர்களுங்கூடத் தம் தாய்தந்தையார், பாட்டன் பாட்டியர், பூட்டன் பூட்டியரை நினைந்து அது செய்யக் காண்கின்றனமே யன்றிப், பரிமேலழகியார் கூறும் அயன் படைப்பான பிதுரரை நினைந்து அங்ஙனஞ் செய்யக் காண்கின்றிலேம். இதனாலும், பரிமேலழகியாருரை பண்டைத் தமிழ்வழக்குக்காதல் பின்றைத் தமிழ்வழக்குக்காதல் சிறிதும் இசைந்து நில்லாமை, இதனை நடுநின்று காண்பாரெவர்க்கும் நன்கு விளங்காநிற்கும்.



இனி, ஆரியர் தம் மூதாதைகளை வழிபடும் முறையும், தமிழர் தம் மூதாதைகளை வழிபடும் முறையுந் தம்மிற் பெரிதும் வேறுபடுவ வென்பது காட்டுதும். ஆரியர்க்கு மிகப் பழைய நூலாகிய இருக்கு, எசுர், சாமம், அதர்வம் முதலிய நான்கு வேதங்களிலேனும், அவற்றின்கட் சொல்லப்பட்ட வேள்விகள் இங்ஙனம் வேட்கற்பால என அவற்றின் முறைகளை விரித்து அவ் வேதங்களுக்கு உரைநூல்களாய் எழுந்த பிராமணங்களிலேனும் உயிர்களுக்கு ஊழ்வினையும் மறு பிறவிகளும் உண்டென்பது எட்டுணையுங் காணப்படவில்லை. அதனால், இறந்த உயிர்கள் தாஞ் செய் ஊழ்வினையால் மீளப் பிறக்கும் என்னும் உண்மையைப் பண்டைநாளில்,

தொடரும்.

---

# வள்ளுவர் வாய்மொழிக் கோடல் அல்லது புலவர் நட்பு

[திருநெல்வேலி, S. கணபதி B. A.]

**தோற்றுவாய்:** காண்பன வெல்லாம் காட்சியாகா; பாலெல்லாம் நல்லாவின் பாலாகா; அங்ஙனே நூல்களெல்லாம் நூல்களாகா. மலர்தலையுலகிடைத் தோன்றிய நூல்கள் பலவேயாயினும் அவைகளை எல்லாம் ஆன்றோர் நன்னூல்களெனக்கொள்ளுமா

ளது நூற்கண் ஆங்காங்கு இடை புகுத்தியதனால் வள்ளுவரது உணர்ச்சிக்குத் தங்களது உணர்ச்சியும் ஓரோவழி உடன்பாடா யிற்று என்பது தேற்றம். உடன் பாடாகவே,

"புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்"

என்ற உண்மை அங்கை நெல்லியெனத் தெரியக் காண்டும். நட்பினராகவே புலவர்மாட்டு வாட்ட மிலருளுங் கோட்டமில் குணனும் அசையா நிலையும் நசையாமனமும் அஃகாவன்பும் வெஃகா உள்ளமும் வெகுளாப்பண்புய் விடாப் பேரன்பும் தெற்றெனத் தோன்றிற்று.

நிற்க, வள்ளுவரது குறளை எடுத்தாண்ட பல புலவருள்ளும் தலைசிறந்தவர்கள் அருட்பிரகாசரான நமது சிவப்பிரகாச சுவாமிகள்; அமிழ்தினுமினிய தமிழெனு மடந்தை யணிமேகலையாம் மணிமேகலையின் அணிகெழுபோக்கினை அருளிப் போந்த நம் கூலவாணிகச்சீத்தலைச் சாத்தனார்; செம்பொருளின்பம் பயந்த ஒப்பாரு மிக்காருமில்லாக் கம்பநாட்டாழ்வார்; பயில்வாருள்ளத்தை அள்ளும் சிலப்பதிகாரமெனும் இலக்கியச் செலவு தந்த இளங்கோவடிகள்; சொல்லுக்கு வில்லி யென்ற வில்லிப்புத்தூராழ்வார்; உமாபதி சிவம், உய்யவந்த தேவநாயனார், சேரமான் பெருமாணாயனார்; ஆளுடைய பிள்ளையார்; ஆளுடைய நம்பிகள், அழுதடைந்த அன்பர்; நக்கீரர்; கபிலர்; பூதஞ்சேந்தனார்; திருத்துறையூர் சாந்தலிங்க சுவாமிகள்; காலஞ்சென்ற மனோன்மணிய ஆசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள்; நீதிநூல் தந்த வேதநாயகம் பிள்ளையவர்கள்; இன்னனைய பலர். இவர்களெல்லோரும் எடுத்தாண்ட ஒரு சில குறட்பாக்களை விரிவஞ்சிச் சுருக்கமாக நிரல்படத் தொடுத்துக் காட்டுவாம்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"
(கடவுள்வாழ்த்து-செ. ௧.)

இக்குறளின் நுண்பொருள் பிறநூல்களில் பயின்றிருத்தல்:



'அகர வுயிர்போ லறிவாகி யெங்கு
நிகரிலிறை நிற்கு நிறைந்து"
(உமாபதிசிவம்-திருவருட்பயன்-பதிமுது நிலை-செ. ௧.)

"அகரமுதலி னெழுத்தாகி நின்ற யடியேனுய்யப்
போவதோர் சூழல் சொல்லே"
(சுந்தரர் தேவாரம்-திருநெல்வாயில்-செ. 7)

"அகர வுயிரெழுத் தனைத்து மாகி வேறு
யமர்ந்ததென வகிலாண்ட மனைத்துமாகி"
(தாயுமானவர்-பொருள்வணக்கம்-செ. 12)

"விற்பிரம்பா லுற்றவடுமேவ வுலகெங்கு நிறை
சிற்பரனே தெய்வஞ் சிவ சிவா!—சொற்சிறந்த
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"
(சிவசிவ வெண்பா)

"சீர்கொளிறை யொன்றுண்டத் தெய்வநீ யென்றேப்பாற்
சோர்வி லடையாற் றெளிந்தோஞ் சோமேசா—ஓரின்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"
(சோமேசர் முதுமொழி வெண்பா.)

" அக்கரங்க ளின்று மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு "

"ஒன்றென மறைகளெல்லா முரைத்திட வுயிர்களொன்றி
நின்றன னென்றுபன்மை நிகழ்த்துவ தென்னை யென்னி
னன்றவை பதிதானொன் றென்றறையு மக்கரங்கடோறுஞ்
சென்றிடு மகரம்போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே "

" எவ்விடத்து மிறையடியை யின்றி யமைந்தொன்றை
யறிந்தியற்றிடா வுயிர்க ளிறைவன்றானுஞ்
செவ்வியின் னுளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து
சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்ப
னிவ்வுயிர்கடோற்றும் போதவனை யின்றித் தோற்றா
விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கு
மவ்வுயிர்போ னின்றிடுவனுதலானு
மரனடியை யகன்று நிற்பதெங்கே யாமே "
(மனவாசகங்கடந்தார்-உண்மை விளக்கம் செ. 30)

நச்சினார்க்கினியரும் "மெய்யினியக்க மகர மொடு சிவணும்" என்னுஞ் சூத்திரத்து "இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் றன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கு மொப்ப முடிந்தாற்போல அகரமும் உயிர்க் கண்ணுந் தனிமெய்க் கண்ணுங் கலந்து அவற்றின் றன்மையாயே நிற்குமென்பது சான்றோர்க்கெல்லா மொப்ப முடிந்தது; அகரமுதல வென்னுங் குறளான் அகர மாகிய முதலையுடைய வெழுத்துக்க ளெல்லாம், அதுபோல இறைவனாகிய முதலை யுடைத்து உலகுஎன வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும், கண்ணன் "எழுத்துக்களில் அகர மாகின்றேன் யானே" யெனக் கூறியவாற்றானும், பிற நூல்க ளானு முணர்க" என்ற உரை நடையானும் முதற்குறளின் கருத்தொருமை யறிதற்பாலது.

2. "பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி
லேதில் பிணந் தழீஇயற்று"

(வரைவின் மகளிர்-செ. 3)

இக்குறளின் கருத்து பிறநூலின்கட் காண்டல்:

"கலவி செய்த மாதென்னை விலைகேட்டாளுட னெக்கக்கலந்து காம நலமுண்ட வுனக்கு விலையேதென்றேன் சவமனைய நான்சுகிக்க விலையென்றாள் பொய்யென்றேன் வள்ளுவர்கூறிய தறளாமினியநூலில் விலைமாதைச் சேர்தல் பிணந்தழுவியதை யொக்குமென்றார் வீணே வென்றாள்"

(ச. வேதநாயகம்பிள்ளையவர்கள் நீதிநூல்-கணிகைய ரியல்பு செ. 24.)

ஈண்டு தந்நலம் விலை கொடுப்பார் யாவர்க்கும் விற்பதல் லது அதற்கு ஆவார் ஆகாதாரென்னும் வரைவிலாத மகளிரது இயல்பினை விதந்தோதுவான் புக்க ஆசிரியர் திருவள்ளுவனார் அவர்கள் "பொருட்பெண்டிர்" என்றும், "வரைவின் மகளிர்" என்றும், "இருமனப்பெண்டிர்" என்றும் கூறியதூஉம், "வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிர்" என்றும், "நறுந்தா துண்டு நயனில் காலை, வறும்பூத்துறக்கும் வண்டு" போல்குவர் என்றும் மணிமேகலை ஆசிரியர் கிளந்ததூஉம், "பொன்விலைப் பாவையர்" என்றும், "பொன்னேக்கியர்" என்றும், "நிதி வழி நேயநீட்டு மன்றலங் கோதை மாதர்" என்றும் கம்பர் சொற்றதூஉம் நனி சிந்திக்கற்பாலன.



3. "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடிக் கண்ணே யுள."

(புணர்ச்சி மகிழ்தல்-செ. க.)

இவ்வாய்மொழியினைத் தம் தாய்மொழியெனப் பிற சைவப்பெரியார் நூல்களில் காண்டல்.

பெண்ணரசாய்த்தோன்றிய பேரிளம் பெண்மையாள்
பண்ணமருமின்சொற் பணிமொழியாண்—மண்ணின்மேற்
கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுளவென்று—பண்டையோர் கட்டுரை
யை மேம்படுத்தாள்"

(சேரமான் பெருமாணயனார் திருக்கைலாய ஞான வுலா—பேரிளம்பெண் 174-178.)

"பண்டுநிகழ் பான்மையினாற் பசுபதிதன்னருளாலே
வண்டமர் பூங்குழலாரை மணம்புணர்ந்த வன்றொண்டர்
புண்டரிகத்தவள் வனப்பைப் புறங்கண்ட அநலத்தைக்
கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றமர்ந்திருந்தார் காதலினால்"

(பெரிய புராணம் - ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் - செ. 267)

4. "இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு"

(பொருள் செயல்வகை -செ. 2)

இவ்வருங் குறள் திருவருட் செல்வர் பிரபந்தத்தில் கண் கூடாகக் காண்டல்.

—"எந்நாளு
மில்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பென்னுஞ் சொல்லாலே"

(சேரமான் பெருமாணயனார் திருக்கைலாய ஞானவுலா, அரிவை 134-136)

(தொடரும்)

# நால்வர்களும் கல்வெட்டுகளும்

திரு. C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் B.A., B.L.

(உாய வது பக்கத் தொடர்ச்சி)

## III

அப்பர் சம்பந்தரைப் போன்றே சுந்தரமூர்த்திகளுக்கும் ஆசார்ய மகிமை தந்து இராஜராஜச்சோழர் முதலானவர்கள் போற்றி வந்தபடியே அவருக்குப் பின்னால் வந்த சோழமன்னர்களும் போற்றி வந்தனர். சுவாமிகளைக் குறித்துப் பல இடங்களில் பல கல்வெட்டுகள் கிடைத்திருக்கின்றன. அவைகளையெல்லாம் ஒழுங்குபடுத்தினால் அடியிற் கண்ட விவரங்களை அறியலாம்.

### i. நாயனார் பெயர்கள்

1. சுந்தர நாயனார்—அவிநாசி.
   i.—181/1909, ii.—187/1909
2. வன்றொண்டர்—திருத்துறைப்பூண்டி—478/1912
3. ஆரூருடையநம்பி—திருவிடைமருதூர் 309/07
   ii. திருவொற்றியூர் 371/11
4. திருத்தொண்டத்தொகை i. சங்கிராமநல்லூர் (கோ) 148/09
   ,, ii. திருப்பத்தூர் (ராம) 104/08
5. நம்பி ஆரூரனார்—தஞ்சை S.I.I. Vol. II. No. 38-41
6. பிள்ளைநம்பி ஆரூரனார்—குகூர்—276/17
7. தடுத்தாட்கொண்ட தேவர் திருவெண்ணைநல்லூர் 423/21
8. ஆலாலசுந்தரர்—ஷை 435/21
9. ஸ்வஸ்சாமி மித்ரர்—73/90 திருவாரூர்.

இப்பெயர்களெல்லாம் நாயனார் சரிதத்தில் வருவதைக் கவனிக்கலாம்.



### i. நாயனார் கோயில்கள்.

1. அவிநாசி (கோவை 12) சுந்தரபாண்டியதேவர் 31-ம் ஆண்டு சுந்தரபாண்டியன் I (1216—35)

புக்கொளியூரில் குளக்கரையின்மீது அரசனால் தாபிக்கப்பெற்ற சுந்தரநாயனார் கோயிலுக்கு நெல்லுக்காக பாண்டிமண்டலத்து கீழ்வழிநாட்டு அரணையூர் என்ற சீவல்லிபுரத்து வியாபாரியால் பொன் அளித்தது. சுந்தரபாண்டியன் என்ற ஒரு கொங்குபாண்டியனும் இருந்தான். புக்கொளியூர் என்றது அவிநாசியின் பூர்வ பெயர். (கி. பி. 1247)

2. அவிநாசி (கோவை 18)

வீரபாண்டியன் 14-ம் ஆண்டு பார்ப்பாரப்பூண்டி என்ற வீரராஜேந்திர நல்லூர்க் குடிகள் தென்பள்ளியில் இருந்த சுந்தரநாயனார் ஆலயத்திற்கு நெல் தானம் கொடுத்தது. ஒரு வீரபாண்டியன் 1265 முதல் 1281 வரை ஆண்டான். தென்பள்ளியும் புக்கொளியூரும் வேறு என்பது தெரியவில்லை. (கி. பி. 1279)

(3) ஆரகலூர் (சேலம் 11)

குலோத்துங்கன் III-29-ம் ஆண்டு—5/19/1206, எம்பெருமக்கள் (அப்பர் சுந்தரர் சம்பந்தர்) சேவைக்காக 5000 காசு தானம் செய்தது.

(4) திருவிடைமருதூர் (தஞ்-336) கோனேரின்மைகொண்டான் 21-ம் ஆண்டு ஆளுடையபிள்ளையார் ஆரூருடையநம்பி இவ்விருவர் பூஜைக்காக பூதானம் செய்தது.

(5) தஞ்சை (தஞ்-1337-40) ராஜராஜதேவர் 29-ம் 1014, ராஜேந்திர - 3-ம் 1017 A. D.

நம்பி ஆரூரனுருக்குப் பீடம் காறை முதலிய தருமம். (மேலே விபரம் காண்க.) நங்கை பரவையாருக்கும் பிரதிமை உண்டு.

(6) குகூர் (கும்பகோணம்) 299/17. நம்பி ஆரூரனார் கோயி

யில் சித்திரைத் திருவிழாவிற்காகப் பூதானம் செய்தது. சாலையில் கப்பல் அழித்த ராஜகேசரிவர்மன் 10-ம் ஆண்டு.

(இராஜராஜன் I-995 A.D.)

(7) பனையவரம் (தென் ஆறு) 320/17 இராஜேந்திர சோழர் (?) 8-வது ஆண்டு. இதில் ராஜேந்திர சோழ தேவர்க்கும் பரவை நங்கையாருக்கும் நந்தாவிளக்கு தானம் செய்தது (கி. பி. 1021) கண்டிருக்கிறது.

(8) திருவாரூர் (73/90)

வடமொழியில் 'ஸ்வஸ்வாமி மித்ர' என்று குறிக்கப்பட்டுள்ளது. சுந்தரருடைய தாயார் இசைஞானியார் பிறப்பிடம் திருவாரூர் என்றும் குறிக்கிறது. மூவருக்கும் ஆராதனைக்காக தானம் தந்தது. குலோத்துங்கன் II, 7-ம் ஆண்டு கி. பி. 1130.

கல்வெட்டுகளில் கண்டபடி மேற்சொல்லிய எட்டு இடங்களில் சுந்தரர் ஆலயங்கள் இருப்பதன்றி ஒவ்வொரு சிவாலயத்திலும் அறுபத்துமூவர் மண்டபங்களில் நால்வரையும் தாபித்து இருப்பது யாவரும் அறிந்ததே. எனினும் தனிமையாக அடியிற் கண்ட ஆலயங்களை ஒட்டிச் சுந்தரருக்கு ஆலயமோ சிலாஸ்தாபனமோ உண்டு என்பதை அன்பர்கள் அறியவேண்டும்.

(1) பேரூர் (கொங்குநாடு) பள்ளுப்படலத் திருவிளையாடலை ஒட்டியது.

(2) அவிநாசி (கொங்கு) முதலை பிள்ளை உமிழ்ந்ததை ஒட்டியது.

(3) திருமுருகன்பூண்டி (கொங்கு) வேடுபறியை ஒட்டியது.

(4) திருவஞ்சைக்களம் (மலைநாடு) சேரமானொடு நட்புப் பற்றியதும் கைலாயம் சென்றதும்.

(5) வேதாரணியம் (சோழ) தியாகராயருக்கு எதிரில் சேரமானோடு சென்றது.

(6) திருவாரூர் (சோழ) பரவையாருடன் வாழ்ந்தது.

(7) திருநாவலூர் (நடு) பிறப்பிடம்.

(8) திருவெண்ணைநல்லூர் (நடு) அருள்பெற்று தடுத்தாட்கொள்ளப் பெற்றது.



(9) திருவொற்றியூர் (தொண்டை) சங்கிலியாரோடு மணம் கொண்டது.

iii. நாயனார் மடங்கள்.

i. திருத்தொண்டத்தொகையான் மடம்: சங்கிராமநல்லூர் கொழுமம் (கோவை 448.) சோளீசுரமுடையார் ஆலயம் கோனேரின்மை கொண்டான் 25-ம் ஆண்டு கொழுமத்தில் வீர சோழ திருமடை விளாகத்தில் திருத்தொண்டத்தொகையான் மடத்து தபசிகள் மூவருக்கு அன்னதானம் செய்ய நெல் கொடுத்தது. வீரராஜேந்திர சோழனுக்கு கோனேரின்மை கொண்டான் என்ற பட்டம் உளதால் கி. பி. 1232 ஆக இருக்கலாம்.

ii. திருத்தொண்டத்தொகையான் திருமடம்:—

திருப்பத்தூர் (ராம 242). குலசேகரபாண்டியன் 13-வது ஆண்டு திருத்தொண்டத்தொகையான் திருமடத்தைச் சொல்லி இவ்வூர்ச் சபையோர் தயாபஞ்சரம் என்ற பெயருடைய ஆலய மண்டபத்தில் கூடி வரி சகாயம் செய்ததைக் குறிக்கிறது. ஒரு வேளை குலசேகரன் I ஆக இருக்கலாம். அப்படியாயின் காலம் கி. பி. 1203.

iii. திருத்தொண்டத்தொகையான் குகை:—10/1918. திருவிடவாயல் (தஞ்சை)—இராஜேந்திர சோழன் III. 4-ம் ஆண்டு 14-10-1249--இத் திருத்தொண்டத்தொகையான் குகையை ஒரு வாணதராயரின் பொருட்டு ஆணைமங்கலமுடையான் அரையன் வடுகனாதன் என்ற சென்னவரையர் தாபித்தது. திருத்தொண்டத்தொகையான் குகையில் திருமுறை சேமித்து வைத்திருக்கும் திருப்பள்ளியறையைக் காப்பவர், திருப்பாட்டு ஓதுபவர் இவர்கள் ஜீவனத்திற்கு திருமுறைத் தேவாரச் செல்வன் குகையில் வசிக்கும் முதலியார் திருவையாறுடையார் வழித்தோன்றிய ஒரு பக்தனால் பூதானம் செய்யப்பட்டது. திருமுறைத் தேவாரச் செல்வன் குகையானது இராஜாதி ராஜவளநாட்டு கழுமலநாட்டு திருக்கழுமலத்து திருத்தோணீச்சுரம் உடைய நாயனார் ஆலயத்தில் நாசிங்கதேவர் சந்ததியார் கட்டிய குகையில் உள்ளது. ஆகவே கொங்குநாடு, பாண்டிநாடு, சோழநாடு

இம்மூன்று நாடுகளிலும் 13-ம் நூற்றாண்டின் முற்பாகத்தில் மூன்றுமடங்கள் ஏற்பட்டிருந்ததையும் அவைகளில் தேவார படனம் நடந்து வந்ததையும் அறிந்தோம். இன்னமும் கல்வெட்டுகளில் குறிக்கப்படாத பல மடங்கள் இருந்திருக்கலாம். அது வேறு ஆராய்ச்சிக்கு இடம் ஆகும்.

iv. நாயனார் பேயர் வைத்தது.

i. வன்றொண்ட முதலியார்:—

திருத்துறைப்பூண்டி மருதீசுவரர் ஆலயம் } (தஞ்சை) 1539

ராஜ ராஜன் III. 18 ஆம் ஆண்டு கி. பி. 1234

இதில் திருத்துறைப்பூண்டி உடைய நாயனாருக்கு ஒரு வன்றொண்ட முதலியார் உத்தம சோழபுரத்து ஒரு நிலத்தை தானம்செய்தது.

ii. திருத்தொண்டத்தொகை மங்கலம்

திருமயானம் பிரமபுரீசுவரர் ஆலயம் தஞ்சை 96

கோனேரின்மை கொண்டான்.

22-ஆண்டு-இக்கல்வெட்டின் கீழ்ப் பெயரில்லாத ஒரு அரசன் காலத்து II-ம் ஆண்டில் வீணை வாசிக்கவும், வேதம் சொல்லவும் ஸ்ரீருத்திரம் சொல்லவும் தானம் செய்ததையும் திருத்தொண்டத்தொகை மங்கலம் சிவபாதசேகர மங்கலம் என்ற இரண்டு ஊர்களையும் நாயன்மார் பெயர்களையும் குறிக்கும் சாசனம் ஒன்று இருக்கிறது.

iii. வன்றொண்டன்

தஞ்சை திருப்புறம்பியம் சாக்ஷீஸ்வரநாதர் ஆலயம் 344/27. அரசன் பெயர் இல்லை. 13-வது ஆண்டு.

இதில் திருப்புறம்பிய முடையார்க்கு ஐப்பசி, பங்குனி உற்சவங்களிலும் திருவேட்டை, தீர்த்தம் நாட்களிலும் சேவை செய்வதற்காக அவரிட்டாயன், திருத்தொண்டன், வன்றொண்டன், சண்டேசுவரன், இயற்பகை, கோட்புலியார், விறன்மிண்டன், அணுக்க நம்பி என்றபெயர் உடையார்கள் பூதானம் செய்தது.



இதில் பல நாயன்மார்களின் நாமங்களும் வரிசையாக வந்துள்ளதைக் கவனிக்கவேண்டும்.

iv. வன்றொண்டத்தாழி

திருவிடைமருதூர் ராஜ ராஜன் I-999. } ஒரு தாழிக்கு வன்றொண்டத் தாழி என்ற பெயர் கொடுக்கப் பட்டுள்ளது.

v. தடுத்தாட்கொண்டதேவர்

திருவெண்ணைநல்லூர் கிருபாபுரீசுரர் ஆலயம் 423/21.

இதில் திருமுனைப்பாடி நாட்டு திருவெண்ணைநல்லூர் தடுத்தாட்கொண்ட தேவர்க்கு கூடல் ஆளப்பிறந்தான் அரச நாராயணன் என்ற காடவராயன் சில கிராமங்களின் வரிகளைத் தானம் செய்தது கண்டிருக்கிறது

அரசன் பெயரில்லை.

காலம்-12-ஆம் நூற்றாண்டு.

vi. தடுத்தாட்கொண்ட நாயனார்.

திருவெண்ணைநல்லூர் கிருபாபுரீசுவரர் ஆலயம். 430/21.

ஜடாவர்மன் வீரபாண்டியன் 5-ஆண்டு 12—11—1301 தடுத்தாட்கொண்ட நாயனாருக்கு நந்தவனம் வைப்பதற்காக 25-பணத்திற்கு விக்கிரமபுரத்து ஊராருக்கு 500 குழி நிலம் விற்றது.

vii. ஆலாலசுந்தரப் பெருந்தெரு

திருவெண்ணைநல்லூர் 435/21 இராஜராஜ தேவர் 5-ம் ஆண்டு.

திருவெண்ணை நல்லூர்-ஆட்கொண்டதேவர் சந்திவிளக்குக்காக ஆலாலசுந்தரப் பெருந்தெருவில் வசித்த ஒருவன் 4-பசு தானம் செய்தது.

viii. வழக்குவென்ற திருவம்பலம்

வெண்ணை நல்லூர் 441/21 குலோத்துங்கச் சோழன் 29-ஆண்டு வழக்குவென்ற திருவம்பலம் என்ற கல் மண்டபம் கட்டுவதற்காகச் சில குடிகளுடைய வீடுகளை எடுத்துக்கொண்டு வேறு இடம் தந்தது.

ix. தடுத்தாட்கொண்ட நல்லூர்
வெண்ணெய்நல்லூர் 446/21
சகம் 1430—1508. A. D.

கோயில் அதிகாரிகள் ஒரு சூரிய நாராயணன் என்பவருக்குத் தடுத்தாட்கொண்ட நல்லூர் செங்காடன் குளத்தூர் என்ற ஊர்களை விற்றது.

x. ஆலாலசுந்தரர் நந்தவனம்

காளஹஸ்தி ஈசுவரர் ஆலயம்—99/22 குலோத்துங்கச் சோழன் 32-ஆண்டு.

ஆலாலசுந்தரர் நந்தவனத்தில் இரண்டு ஆள் வேலைக்காக வீமராசன் 800 குழி நில தானம் செய்தது.

xi. திருத்தொண்டத்தொகை ஈசுவரமுடையார்

சிதம்பரம். (தென் ஆறு 54) குலோத்துங்கன் III. 2-ஆண்டு 1180-கி. பி. திருத்தொண்டத்தொகை யீசுவரம் உடையார் ஆலயமும், நிலமும், குளமும் தீர்வையிலிருந்து நீக்கப்பட்ட விவரம் கண்டிருக்கிறது.

xii "பிச்சன் என்று பாடச்சொன்னான்" என்ற பெயர் திருவெண்ணெய் நல்லூர். 431/21. கோப்பெருஞ்சிங்கன்—27 ஆண்டு—28—3—1268 இப்பெயர் கொண்ட வெள்ளி முரசைக் கோயிலுக்குத் தானம் செய்தது குறிக்கிறது.

xiii. பெருமாள் ஆலாலச் சுந்தரப் பெருமாள்: திருவெண்ணெய் நல்லூர் 437/21—இப்பெயர்கொண்ட ஒருவர் கட்டளையின் படி தேவாரம் பாடிச் சொல்லும் விஷயத்தைக்குறித்து ஒப்பந்தம் செய்ததைக் குறிக்கிறது.

மேற்காட்டிய கல் வெட்டுகளிலிருந்து மனிதன், முரசு அளவை, ஊர், தெரு, மண்டபம், நந்தவனம், ஈசுவரன் இவர்களுக்கெல்லாம் நாயனார் பெயரும் அவர் சரித்திரத்தில் கண்ட செய்திகளின் பெயரும் இட்டு வழங்கி வந்ததைக் கவனிக்கலாம். இவைகள் பெரும்பான்மை சோழர் ஆதிக்கத்திலே 10 முதல் 15 நூற்றாண்டுவரை வழக்கத்திலிருந்தன என்பதும் தெ



ரிகின்றது. பழைய கல் வெட்டுக்களிலே ஆலாலசுந்தரர் என்ற பெயர் கிடையாது. பிற்காலக் கல்வெட்டுக்களில் அப்பெயர் வந்ததும் காண்க. நம்பிஆரூரனார் ஆலாலசுந்தரருடைய அவதாரம் என்ற கொள்கை பின்னர் வந்ததுபோலும்!

## V. சரித்திர பாகங்கள்.

1. ஆளுடையநம்பி புராணம்

திருவொற்றியூர் (செங் 965) ஆதிபுரீசுவரர் ஆலயம் இராஜாதிராஜ தேவ II-9 ஆண்டு கி. பி. 1181 படம்பக்க நாயக தேவர் ஆலயத்தில் பங்குனி உத்திரத் திருவிழாவில் ஆளுடைய நம்பி புராணத்தை வாசிக்க அப்போது அரசனும், சதுரானன பண்டிதனும், வாகீசுவர பண்டிதனும், கோயில் நாயகனும், ஸ்ரீகாரியஸ்தனும், மற்றோரும் புராண படனம் கேட்டதை இச் சாசனம் குறிக்கின்றது.

2. திருத்தொண்டத்தொகை

திருவொற்றியூர் ( செங் 1006 ) இராஜாதிராஜதேவன் 1 28 ஆண்டு கி. பி. 1046.

இது பங்குனிஉத்திரத் திருவிழாவிற்கு நைமித்திகத்திற்குத் தானம் செய்ததையும் அதற்காகக் காவலூர் சபையார் 30 காசு பெற்றுக்கொண்டு வருடம் 1-க்கு 75-கலம் நெல் கொடுப்பதாக ஒத்துக்கொண்டதையும் கோயில்நிர்வாகம் சம்பள விகிதங்கள் முதலியவையும் சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகையைப் பற்றியும் 63-நாயன்மார் பிரதிமைகளைப் பற்றியும் கூறுகிறது.

3. "பிச்சன்என்று பாடச்சொன்னான்."

திருவெண்ணெய் நல்லூர் (தென் ஆறு) 431—21

கோப்பெருஞ்சிங்கன்-27-ம் ஆண்டு—28—3—1268. செஞ்சிக்குச்சேர்ந்த ஒரு மத்தியஸ்தனை உடையான் ஸ்ரீ கைலாயமுடையான் என்பவன் திருவெண்ணெய்நல்லூர் ஆட்கொண்டதேவர்க்கு "பிச்சன் என்று பாடச்சொன்னான்" என்ற பெயரு

டைய இரண்டு வெள்ளி முரசும், ஒரு பொன் கால்காறையும் தானம் செய்தது.

### 4. தேவாரம் ஓதுதல்

திருவெண்ணெ நல்லூர் 437/21 தேவாரம் ஓதிக்கொண்டு திருவிழாக்களில் தெருவழியாகப் போகும் உரிமைகளின் பொருட்டு ஒரு சண்டையில் உயிர்துறந்த திருப்பூவண முடையார் இலங்கேசுவரன் என்பவனுக்காகத் திருவெண்ணெ நல்லூர் கைக்கோளர்கள் பெருமான் ஆலால சுந்தரப்பெருமான் கட்டளையின்படி ஒப்பந்தம் செய்தது. ருத்ரோத்காரி வைகாசி 22 தேதி. அரசன் பெயரில்லை.

### 5. திருப்பதிகம் பாடினது

குகூர் (கும்பகோணம்). 275/17. இராஜராஜன் 1. 12 ஆண்டு—கி. பி. 997.

திருநாறையூர் நாட்டுக் குகூர் வாசிகள் திருப்பதியம் பாடின பிள்ளை நம்பி ஆரூரனுக்குப் பூதானம் செய்தது.

### 6. திருப்பதியம் பாடுதல்

திருப்பத்தூர் திருந்தளீசுர முடையார் ஆலயம் (ராம 237) குலசேகரப்பாண்டியன் 4-ம் ஆண்டு. திருந்தளி நாயனார் ஆலயத்தில் திருப்பதியம் பாடக் கண்டன் உய்யவந்தான் என்பவன் அதிசய பாண்டிய நல்லூரில் சில வரிகளை விற்றது.

மேற்காட்டிய கல்வெட்டுக்களிலிருந்து சுந்தர மூர்த்திகளின் சரித்திர பாகங்கள் பல சோழர் காலத்திலேயே பிரபலமாக தெரிந்து ஆளப்பட்டன என்பது வெளிப்படை. சுவாமிகள் திருத்தொண்டத் தொகையும் திருப்பதிகங்களும் பாடினதும் ஈசன் பிச்சன் என்று பாடச்சொன்ன விஷயமும் குறிக்கப்பட்டுள்ளன. மேலும் அவரது புராணம் ஆலயங்களில் படனம் செய்ததும் அப்போது அரசர்கள் முதற்கொண்டு ஏனையோர் கேட்டதும் வழக்கமாக இருந்தது. திருவொற்றியூரில் அரசன் முன்னிலையில் புராணபடனம் செய்தது கி. பி. 1181-ல். இராஜாதிராஜன் பாட்டனை குலோத்துங்கன் II (1123-1146)



கேட்டுக்கொண்டபடி சேக்கிழார் திருத்தொண்டர் புராணம் பாடினார். ஆகவே இராஜாதி ராஜன் கேட்ட புராணம் சேக்கிழார் இயற்றிய புராணம் என்றே ஊகிக்கலாம். மேலும் தேவாரப் பதிகங்கள் ஆலயங்களில் ஓதுதலும், அதற்காகப் பொன், நிலம் முதலியவை தானம் செய்தலும் அக்காலத்தில் வழக்கமாக இருந்தது. இதைப்பற்றிப் பல கல் வெட்டுக்கள் இருந்த போதிலும் ஒன்றுமாத்திரம் உதாரணமாகக் குறிக்கப்பட்டது. தேவாரம் தெருவழியே பாடிச்செல்லும் வழக்கம் இருந்ததென்பதும் அப்போது எந்தத் தெரு என்பதைக் குறித்து வழக்கு ஏற்பட்டுக் கலகமாகி ஒருவர் உயிர் துறந்ததும் அதன்பேரில் மத்தியஸ்தம் ஏற்பட்டு ஒப்பந்தம் ஏற்பட்டதும் திருவெண்ணெ நல்லூர்ச் சாசனத்தில் சொல்லப்படுகிறது. தற்காலத்தில் இதைப்போன்ற கலகங்கள் பல நேரிடுவதை நாம் நேரில் அறிவோம். முன்காலத்திலும் இருந்தது என்று இதனால் அறிகிறோம்.

மேலும் மேற்காட்டிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் எல்லாக் கல் வெட்டுக்களையும் பாகுபடுத்தி ஆராயும் பட்சத்தில் அடியிற்கண்ட வருஷ வரிசையாகவும், அரசர்கள் வரிசையாகவும் அவைகளைக் குறித்திடலாம்.

| ௵ | அரசர்கள் பெயர், | அவராண்டகாலம். | சாசன எண் |
|---|---|---|---|
| 995 | இராஜராஜன் I | 985—1013 | ii-6 |
| 997 | ,, | ,, | v-5 |
| 999 | ,, | ,, | iv-4 |
| 1014 | ,, | ,, | ii-5 |
| 1017 | இராஜேந்திரன் | 1013—1045 | ii-5 |
| 1021 | ,, | ,, | ii-7 |
| 1046 | ,, | ,, | v-2 |
| 1130 | குலோத்துங்கன் II | 1123—1146 | ii-8 |
| 1180 | ,, III | 1178—1216 | iv-11 |
| 1181 | இராஜாராஜன் II | 1171—1186 | v-2 |
| 1203 | குலசேகரபாண்டியன் | 1170—1216 | iii-2 |

| | | | |
|---|---|---|---|
| 1206 | குலோத்துங்கன் III | 1178—1216 | ii-3 |
| 1232 | கோனேரின்மை கொண்டான் (வீரராஜேந்திரன்) | 1207—1252 | iii-1 |
| 1234 | ராஜராஜன் III | 1216—1248 | iv-1 |
| 1247 | சுந்தரபாண்டியன | 1238—1255 | ii-1 |
| 1249 | ராஜேந்திரன் III | 1245—1267 | iii-3 |
| 1268 | கோப்பெருஞ்சிங்க பல்லவன் | 13-நூற்றுண்டு | iv-11 |
| 1279 | வீரபாண்டியன் | 1265—1285 | ii-2 |
| 1301 | ஜடாவர்மன்வீர பாண்டியன் | 1296—1592 | iv-6 |

பெயரில்லாததும் இன்னுனென்று நிச்சயமாக சொல்லக் கூடாதவர்களும் அடியிற்கண்டன.

| | | |
|---|---|---|
| அரசன் பெயரில்லை | 1508 | iv-9 |
| ஷை | | iv-3 |
| ஷை | | iv-5 |
| ஷை | | v-4 |
| கோனேரின்மைகொண்டான் | | ii-4 |
| ,, | | iv-2 |
| இராஜராஜன் | | iv-7 |
| குலோத்துங்கன் | | ix-8 |
| ஷை | | iv-10 |

மேலே கண்ட பாகுபாட்டைக் கவனித்தால் சோழர்களில் இராஜராஜன் I முதல் இராஜேந்திர III வரை எட்டு அரசர்கள் காலங்களில் சுந்தரரைப்பற்றிய கல் வெட்டுகள் கிடைக்கின்றன வென்றும், அவைகள் கி. பி. 995 முதல் 1249 வரை சுமார் 250 ஆண்டுகள் பரவி இருந்தன வென்றும் புலப்படும். அக்காலத்திலும் இராஜேந்திரன் முதல் குலோத்துங்கன் II காலம் மட்டும் 7 அரசர்கள் காலம் முழுதும் சுந்தரர் கல் வெட்டுகள் இல்லை. மற்ற சைவ சமயாசாரிகளின் கல் வெட்டுகளும் அரிதாக இருந்தன. ஆகவே அந்த ஏழு அரசர்கள் காலங்



களில் சைவசமய அபிமானம் குன்றியிருந்தது எனலாம்; அல்லது அடிக்கடி அரசாங்கக் குழப்பமும் சிறுகாலம் ஆண்ட அரசத் தொகுதியும் இளவயதான அரசர்களும் இருந்தமையால் ஆலயங்களைக் கவனிப்பார் இல்லை போலும். இராஜேந்திரன் III காலத்திலேயே சோழ ஆதிக்கம் குறைந்து வந்ததினுல் கல் வெட்டுகளும் காணேம்.

மேலும் பாண்டிய அரசர்களுள் குலசேகரன், சுந்தரபாண்டியன், வீரபாண்டியன், ஜடாவர்மன் வீரபாண்டியன் என்ற நால்வர் காலத்தில் 1203 முதல் 1279 வரைக்குமட்டும் நான்கு கல்வெட்டுகள் கிடைத்தன. அவர்களிலும் 2, 3, பாண்டியர்கள் கொங்கு பாண்டியர்களே. வீரராஜேந்திரன் என்பான் கொங்கு சோழன். கோப்பெருஞ்சிங்கன் காடவர் குலத்து ஒரு சிற்றரசன். பெயர் கிடைக்காதவை சில உள. அவைகளும் இதே காலத்தைச் சேர்ந்தவைகளே. ஆக கி. பி. 995 முதல் 1301 வரை 300 வருட காலம் சுந்தரருடைய மகிமை பரவி வந்தது. பின்னுல் 1508-ல் ஒரே கல்வெட்டுதான் தனியாக நிற்கிறது. சுந்தரர் கைலாயமடைந்த 170 வருடங்களுக்குள்ளாக அவருடைய முதல் பிரதிமை தாபிக்கப்பெற்றது குறிப்பிடத்தக்க ஒரு செய்தி ஆகும். 14-ம் நூற்றுண்டு முதல் அவரைப்பற்றிய யாதொரு கல்வெட்டும் கிடைக்காததின் காரணம் புலப்படவில்லை. பிற்காலத்தில் வந்த விஜயநகரத்தாரும் அவர்கள் பிரதிநிதிகளான நாயகர் முதலான அரசர்களும் சைவசாரியர்களிடம் அன்பு வைக்கவில்லை போலும்.

இனி, சுந்தரர் வாழ்க்கையில் அவர் மிதித்த தலங்களில் அவரைப்பற்றி எதுகாறும் கல்வெட்டுகள் சொல்லுகின்றன என்பதைக் கவனிப்போம். சுந்தரர் பிறந்த ஊர் திருநாவலூர். தற்போது அதைத் திருநாமநல்லூர் என்று வழங்குகிறுர்கள். இந்த ஊர் ஆலயத்தில் 56 கல்வெட்டுகள் உண்டு. அவைகளில் சில வெகு பழையவை. பராந்தகன் காலத்ததும் உண்டு. அப்படி யிருந்தும் சுந்தரரைப்பற்றிய விவரம் காணேம். முனைய தரையன் என்ற அரசன் பெயரைச் சில கல்வெட்டுகளில் காண்

கிறோம். இவ்வரசன் நரசிங்கமுனையர் குலத்தோனாக இருக்க வேண்டுமென்று முன்சொன்னோம்.

இனி, சுந்தரர் தடுத்தாட்கொள்ளப்பெற்ற திருவெண்ணெய் நல்லூரைக் கவனிப்போம். அங்கே 12 கல்வெட்டுகளில் சுந்தரர் பெயரும், பெயர் வைத்ததும் போன்ற கல்வெட்டுகள் 7 உள்ளன. அவைகளில் ''பித்தன் என்று பாடச்சொன்னார்'' ''வழக்குவென்ற திருவம்பலம்'' இந்த இரண்டு பிரயோகங்களும் பாராட்டத் தக்கவை.

இனி, அவர் பரவை நாச்சியாருடன் வெகுகாலம் வாழ்ந்த இடமாகிய திருவாரூரில் கிடைத்த 50 கல்வெட்டுகளில் ஒரே ஒரு கல்வெட்டில் அதுவும் வடமொழியில் சுந்தரர்பெயர் குறிக்கப் பெற்றுள்ளது. ஆனால் வேறு ஒரு கல்வெட்டில் திருத்தொண்டத்தொகைபாடிய தேவாசிரிய மண்டபத்தின் பெயர் குறிக்கப் பெற்றிருக்கிறது. அவர் மணம் செய்துகொண்ட மற்றொரு தலமாகிய திருவொற்றியூரில் 169 கல்வெட்டுகளில் இரண்டு கல்வெட்டுகள் அவருடைய புராணத்தைப் பற்றியும், திருத்தொண்டத் தொகையைப் பற்றியும் கூறுகின்றன. சங்கிலியாரைப் பற்றியாவது மகிழடி சேவையைப் பற்றியாவது ஒன்றும் காணேம். அவர் அற்புதங்கள் நடத்திய ஊர்களில் ஒன்றாகிய அவிநாசியில் இரண்டு கல்வெட்டுகளில் அவரது ஆலயத்தைக்குறித்து சொல்லப்பெற்றது கவனிக்கத்தக்கது. அவரது முத்தித் தலமாகிய திருவஞ்சைக்களத்தில் அவரைப்பற்றிய யாதொரு கல்வெட்டும் கிடையாது.

இதுகாறும் சொல்லிவந்தவைகள் நாளது வரையில் வெளியிட்டிருக்கும் கல்வெட்டுகளை ஆராய்ந்து அறிந்தவைகளே அன்றி முழுதும் அல்ல எனலாம். ஏனெனில் இன்னமும் வெளிவராத கல்வெட்டுகள் ஆயிரக்கணக்காக இருக்கின்றன. வெளி வந்தவைகளினும் முழுப்பாகங்களும் பதிப்பிக்கப்படவில்லை. இக் குறை நமது பொதுமக்களுக்குச் சரித்திர ஆராய்ச்சியிலுள்ள அபிமானக்குறைவினால் ஏற்பட்டதே ஆகும்.

———



# மொழியாராய்ச்சி

## (Comparative Philology)

[வித்துவான் G. தேவநேசன் அவர்கள்]

உலகத்திலுள்ள மொழிகளெல்லாம், Turanian, semitic, Aryan என முப்பெருங் கவைகளாயடங்கும். இவற்றுள் ஒவ்வொரு கவையும் பற்பல கிளைகளாய்ப் பிரியும். ஒவ்வொரு கிளையும் ஒவ்வொரு மொழித்தொகுதியாகும். இவற்றுள், துரேனியக்கவையில் திராவிடக் (Dravidian) கிளைக்குத் தலைமையாகக் கருதப்படுவது அமிழ்தினுமினிய தமிழ் மொழியே.

ஒரு மரத்தில், சிறு கிளைகட்கு நேர் இயைபு இன்றேனும் அவற்றைத் தாங்கும் பெருங்கவைகட்கு அடிமரத்துடன் நேர் இயைபிருப்பதுபோல, உலகமொழித்தொகுதிகட்குள் சிறு பிரிவுகட்கு நேர் இயைபின்றேனும் அவற்றிற்குமூலமான பெரும் பிரிவுகட்கு நேரியைபு திட்டமாயுள்ளதாம். எல்லாக் கிளைகட்கும் மூலமான ஓர் அடிமரமிருப்பதுபோல் எல்லா மொழிகட்கும் மூலமான ஒரு தாய்மொழியுமிருத்தல்வேண்டும். உலகத்திலுள்ள மக்களெல்லாம் ஒரு தாய் வழியினராதலின் அவர் வழங்கும் மொழிகளும் ஒரு தாய் வயிற்று வழியிலாதல் வேண்டும்.

உலகத்தின் மக்கள் முதல் முதல் தோன்றினவிடம் கி. மு. 2000 ஆண்டுகட்குமுன் இந்துமகா சமுத்திரத்தில் அமிழ்ந்துபோனதும் தலைச்சங்கமிருந்ததுமான குமரி நாடே. ஆஸ்திரேலியா, தென்னிந்தியா, தென்னாப்பிரிக்கா என்ற மூன்றும் ஆதியில் நிலத்தாலிசைந்திருந்தனவென்று மேனாட்டுப் பண்டிதர்கள் கண்டவுண்மையே இதற்குப் போதிய சான்றாம். ஆகவே மக்கள் முதன் முதற் பேசிய மொழி தமிழேயாதல் வேண்டும்.

எல்லா மொழிகளும் இயற்கை செயற்கையென இருபாலா

யடங்கும். இவற்றுள் தமிழ் ஒன்றுமே இயற்கை. ஏனைய வெல்லாம் செயற்கை. ஆதலான், தமிழ் இயன்மொழி (Primitive Language) என்றும் ஏனைய திரிமொழி (Derivative Languages) என்றும் கூறப்படும். எல்லா மொழிகட்குமுள்ள பெரும்பாற் சொற்களைப் பகுதிப்பொருளுடன் இயற்கை வடிவில் வழங்குவது தமிழேயென்று மொழி நூலால் (Philology) விளங்குகின்றது. அவற்றுள் ஆங்கிலம் (English) கிரேக்கு (Greek) லத்தின் (Latin) என்ற மும்மொழிகளிலும் சென்று வழங்கும் தென் சொற்கள் ஆயிரக்கணக்கினவென்பதை ஐநூற்றுக்கு மேற்பட்டவற்றால் வெள்ளிடை மலைபோல் தெள்ளிதிற் காட்டுதும்:—

Abba-அப்பன்
Abbey-a monastery presided over by an abbot
Abbot-the father of an abbey
Abide, a+bide bide-வதி பதி-வதி-வதிதல்-தங்குதல்
Abode, bode-பதி
Accumulate, ad+cumulas. cumulas-கும்மல். குமி-கும்மல், குமியல்
Acre, *Gr.* agros-அகரம்
Add-அடு, அடை, அடுக்கு
Admire, ad+mire *L.* Miror-மருள்
Agony, *Gr.* agon-இகல்
Agirculture, agros-அகரம். culture-கல்லல்
Ah, Aha-ஆ!
Alias, *Gr.* allos-அல்லது
All-எல்லாம்
Allegory-அல்லகுறி (a description of one thing under the image of another)

Alone, all+one. one-ஒன்று
Along, long-ஒழுங்கு-நீளம்

"வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையும் செய்யும்
[பொருள"
—தொல், சொல், உரி சூ 19

ஒழுகு-ஒழுங்கு-ஒழுக்கம்

Aloof-அலக்கு, அலாக்கு
Alum-அளம்
Amalgam, malgam-முள்கு முள்கல்-கலத்தல்
Amateur *L.* amo-அமர், to love

"அமர்தல் மேல்"-தொல்,சொல்,உரி
"ஆத்திச்சூடியமர்ந்த தேவனை"
—ஔவை

Amaze, a+maze. maze-மய, மயங்கு, மசங்கு
Amethyst, *Gr.* amethystos.-a-அ, methu-மது
Amiable, amo-அமர்
Amicable, amo-அமர்
Amour, *L.* amor-அமர், to love



Anaglyph, *Gr.* ana-அண்ணம்-மேல், glypho-குழிப்பு
Analogue-அன்ன இலக்கம் இலக்கம்-சொல்
Anatomy, *Gr.* ano-அண்ணம், temno-துமி
Anchor-நங்கூரம் *L.* ancora *Gr.* anghyra
Anemometer, Gr. anemos-ஆன்மா. meter-மாத்திரை
Angel-அஞ்சல்
Animal, *L.* anima, *Gr.* anemos-ஆன்மா
Anna-அணு
Annual, *L.* annus-ஆண்டு
Anus-அண்டி
Anxiety-ஏங்கு, ஏக்கம்
Aorta, *Gr.* aeiro-ஏர்-எழுச்சி

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு"
—திருமுரு.

Apply-அப்பு
Apprehend, ad+prehend. prehend-புரிந்து கொள்; hend-get-கொள்
Appeal, *L.* ad+pello; pello-விளி (பிலிசு-தெலுங்கு)
Arch-அரசு
Archon-அரசன்
Architect-அரசத்தச்சன்
Are-இரு
Area-அழுவம்
Ashes-அடலை
Assert, *L.* ad+sero. sero-சேர்
Assign, *L.* ad+signum; signum-சின்னம்

Astrology, star-தாரகை, logy-இலக்கம் or இலக்கியம்
At-இடை
Attack-தாக்கு (prosthesis)
Attar-அத்தர்
Attorney-அத்தாணி
Attract, *L.* ad+traho, traho, draw-திரை. திரைத்தல்-இழுத்தல். திரைத்துக் கட்டு என்னும் வழக்கு நோக்குக
Audacity-அடம்
Augment-ஆக்கம்
Avail, *L.* ad+valeo, valeo-வலி, to be strong
Avarice, *L.* avaritia-இவறல்

"இவறலும் மாண்பிறந்த மானமும்"
—குறள்

Axle-அச்சு
Babe-பார்ப்பு, பாப்பா
Back-பிறக்கு (இடைக்குறை)
Bandy-பண்டி
Bag-பக்கறை
Baggage- ,,
Ban-பன்
Bang, Bangue-பங்கி
Banyan-வாணியன், the Indian fig-tree so called by the English because the Banyans (merchants) held their markets under it
Bar-பார், பாரை, a rod; *v.t.* to hinder

"பாகீற்றிருந்த கலை பாரறச் சென்ற
[கேள்வி"
(சீவ. க. ௭.1).

பாரம் = தலைப்பு

Bard-பாணன்
Bark-படகு
Barometer-பாரமாத்திரை
Barrel-புழை
Barrier-பார்
Barrister, one qualified to plead at the bar
Basket, perhaps பழக்கூடை
Bat-மட்டை
Battalion-பட்டாளம்
Battery-பட்டறை
Bay-பாய்

"ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள"
(தொல். சொல். உரி. சூ 63)

Beak-மூக்கு
Bear-பொறு
Beauty, from beau - பொ, பொல், பொன்.

பொலி + உ = பொலிவு
,, + அம் = பொலம்
பொல் + பு = பொற்பு
,, + இ = பொற்றி-beauty

"பொற்றதோர் பவழந்தன் மேல்"
—சீவ. 2247

பொற்றது = பொலிவு பெற்றது.
பொல் பகுதி

Bed-படை, படுக்கை
Bee-வீ, ஈ
Beetle-விட்டில்
Betel-வெற்றிலை
Bhang-பங்கி
Bill *L*. bulla-புள்ளி

"பள்ளிக்கணக்கு புள்ளிக்குதவாது"
—உலக வழக்கு

Bird-பறவை
Birth-பிறப்பு
Bolt-பாள்
Bore-பொள்
Borough-புரம் Bourg, Burgh
Bottle-புட்டில்
Bowl-வள்ளம், a round cup
Boy-பையன்
Blame-பிழை
Blare-பிளிறு
Bleach-வெளு
Blink-விழி
Blunt-மழுங்கு
Boast-பீத்து, (கொச்சை)
Boat-ஓடம்
Body-படிவம்-வடிவம்
Break-பிள
Broad-பரந்த. Breadth-பரப்பு
Brush-பரசு, பரசுதல்-பெருக்குதல்
Bud-மொட்டு
Bull-புல்லம்

"ஏறொடு மூரிபுல்லம்"— சூடாமணி

Bull-புள்ளி
Bun-பணி, பண்ணிகாரம்-பணிகாரம்-பணியாரம்
Bunch-மஞ்சரி
Burden-பொறை
Burial-புதையல்
Bush-புதர்
Butler-bottler-புட்டிலர்
Butt-புட்டி, முட்டி
Buttock-புட்டம்
Cachirration-கெக்கரித்தல்
Caitiff-கைதி
Calamity-கலி
Calf-களபம்
Calico, a cloth from Calicut-கோழிக்கோடு, கள்ளிக்கோட்டை
Can-கூடு



Can-கெண்டி
Candy-கண்டு-சர்க்கரை
Cane-கன்னல், a reed
Canton-கண்டம், Cantonment
Canto-காண்டம்
Canvas, *Gr.* Cannabis-சணப்பு
Card-கடிதம்
Care, *L*. Carus-கரிசு
Carve-குழி
Cash-காசு
Catamaran-கட்டுமரம்
Caution *L*. Caveo-கவல், கவனி
Cave-குவை, குகை
Cellar-கல்லறை
Chaff-சாவி
Chair-குறிச்சி (Ch=k)
Cheetah-சிறுத்தை
Cheroot-சுருட்டு
Chew-சவை
Child-குழந்தை (ch=k)
Chit-சிட்டு
Choir, *L*. Chorus-குரவை, a dance in a ring
Clan-குலன்
Class-குழு
Clay-களி
Clock-கடிகை
Coat-குடி. குடித்துணி-உலக வழக்கு
Cold-குளிர்ந்த
Collar, *L*. collum-களம் கழுத்து
College-கழகம், originally a collection of men. (*Chambers' Dictionary*)
Colon-குழல்-குடல்
Colour-கெழு

"குருவுங் கெழுவு நிறனாகும்மே"
தொல்: சொல்: உரி

Column-கால்
Comedy-கோமாளி originally a ludicrous spectacle. *Gr*. Comodia
Comely-காமர்
Comic, adj. of comedy
Cone-கொனை, a point
Cool-குளிர்
Coolie-கூலி
Coot-கூழை
Copper-செப்பு (c=ch)
Corn-சோளம்
Corner-கோணம்
Cot-குடி
Cottage-குடிசை
Cotton-கொட்டை-பஞ்சு
Court-கோட்டம் *Gr*. Chortos
Cover-கவி
Covet-கவர்-விரும்பு
Cow-கோ
Coward-கோழை. குவளை-கோழை
Crab-கடப்பான்
Crack-கிறுக்கு
Crane-குருகு
Crew-குழு
Crime-கருமம்
Crook-கொடுக்கு
Cross குறுக்கு
Crow-கரை
Cry-கரை
Crypt-காப்பு
Cuddy-கூடு
Culture-கல், பகுதி
Cumber-கும்பல்
Cumulate-கும்மலிடு
Curl-சுருள். (c=s)

Curry-கறி
Cycle-சக்கரம்
Cyclopædia, *Gr.* Kyklos-சக்கரம், paideia-படிப்பு
Daddy-தாதை
Dance-தாண்டவம்
Dare-தீரம்
Deity-தெய்வம்
Dense-திண்
Drive-திரி
Desert *L.* de+sero. sero-சேர்
Devotion-தபம்-தவம்
Digest, *L.* dis - gero; gero-செறி
Dignity-தகை
Divine-தெய்வ. திவ்விய
Donation, *L.* donum-தானம்
Drag-திரை
Draw-திரை
Drive-துர
Drone-சுரும்பு-ஆண்வண்டு
Ear-அள்-கலப்பை
Ear-ஏர்-காது
Early-ஏல
Echo-இசை
Economy-சிக்கனம்
Err-இழுகு
Every-ஒவ்வொரு
Face-முகம் (c=k)
Facility-வசதி
Fade-வாடு
Fairy, from fay-பேய்
Falcon-வலியன்
Fall-விழு
Fallacy-மாலம்
Fascinate-வசி
Faste-விசை
Fast-பசி
Fate-விதி
Fault-வழு
Fay-பேய்
Fear-வெருவு
Feed-ஊட்டு
Fiddle-விடலை. (See Violin in Chambers')
Fiend-பேந்து
Filial, *L.* filus-பிள்ளை
Firm-உரம்
Flag-விலோதம்
Flash-பளிச்சு (ஒளிக்குறிப்பு)
Flesh-விழுக்கு
Flog-விளாசு
Flood-வழாறு
Flora-மலர். Florin, a coin stamped with the lily flower
Flower-மலர்
Folio-ஓலை
Fool-மாளி, கோமாளி-a court fool
Foot-பாதம்
Forest-புறவு
Form-உருவம்
Frame-வரம்பு
Freeze-உறை
Frill-விறையல்
Fry-வறு
Full-முழு
Fury-வெறி
Fuss-பூசல்-ஆரவாரம்
Galleon-கலம்-கப்பல்
Gallery-கலவறை. கலம்-அணி
Gallon-கலம்
Gallop-கலிப்பு or கெலிப்பு
Gate-கடை, கடவு
Gather-கூடு
Gaunt-கோதை



Geology, *Gr.* ge-கூ logos-இலக்கம்
Geometry *Gr.* ge-கூ metry மாத்திரை
Get-கொள்
Ghoul-கூளி
Giddy-கிடுகிடுத்த
Ginger-இஞ்சி
Girl-குருளை, a child
Globe-கோளம்
Goal-கழை
God-கடவுள்
Gore-கறை
Grain-களஞ்சு-கழஞ்சு
Granary-களஞ்சியம்
Grave-குழி
Grease-கொழுப்பு
Group-கருவி-தொகுதி
Guano-சாணி
Guava-கொய்யா
Guide-காட்டு
Gulf-குலவு
Hail-ஆலி-ஆலங்கட்டி
Hall-சாலை
Hang-தூங்கு
Hard-கடினம்
Haricot-அவரைக்கொட்டை
Heap-குப்பை
Hear-கேள்
Heath-இதை, a barren open country
Heathen, from Heath
Hell-அளி, அளறு
Herd-கிடை
Heritage-உரித்து
Hear-வீரன்
High-உக "உகப்பே யுயர்வு" —தொல்-சொல்: உரி
Hoarse-கோரம்
Hockey-Hookey-கொக்கி
Hole-குழி
Honour-மானம்
Hood-கூடு
Hook-கொக்கி
Hookah-உக்கா
Horn-கோணம்- கோடு
Horror-அரள்
How-எவ்வது
Howl-ஊளை
Huge-உகந்த
Hut-குடி
Hyperbole-உப்பர்ப் போலி, உம்பர்-உப்பர், புகலி-போலி
In-இல்
Inn-இல்
Iron-இரும்பு
Isagon, *Gr.* isos-இசை, gonia-கோணம்
Item, *Sans.*-இதம்-இப்படி இ, பகுதி
Jackass, jack-சேவு-ஆண்
Jar-சால், சாடி
Javelin-சவளம்
Jeer-கேலி
Joint-சந்து
Jury-சூள்
Kail-கீரை
Keen-கூர்
Kid-குட்டி, குட்டன்-வெள்ளாட்டுக்குட்டி
Kill-கொல்
Kiln-காள (வாய்)
Kin-கிளை
Kiss-கொஞ்சு
Knee, *Gr.* gonu-கணு
Lakh-இலக்கம்
Leather-உதள்
Legible, *L.* Lego-இலகு
Lemon-எலாமிச்சை
Lime ,,

Local, *L.* locus-இலக்கு-இடம்
Logic, *Gr.* logos-இலக்கம்-தருக்கம்
Lone, alone, all + one-எல்லாம் ஒன்று-தனிமை
Long-ஒழுங்கு
Lull-லாலாட்டு
Mad-மத்த
Maid-மாது
Mall-மழு
Mammoth-டாமதம்
Man-மன்
Manage, to handle. *L.* Manus, *H* Manicas-மணிக்கை
Mango-மாங்காய்
Mantle-மீந்தோல், a loose outer garment
Manub *from* manus
Many-மன்-மிகுந்த
Mare-மறி பெண்குதிரை
Marine, *L.* Marinus-வாரணம்
Marrow-மூளை
Marvel-மருள்
Mat-மாற்று
Match-மட்டம்
Maze-மச, மசக்கு. மய-மச
Mead-மட்டு-மது
Meal-மெல்லப்படுவது
Meat-மடை
Melon-முலாம்
Melt-மெல்கு
Mere-வெறு
Merge-முழுகு
Mess-மிசை
Metre-மாத்திரை
Might-மைந்து
Mind-மனது
Miracle-மருட்கை
Miser-பிசிரி
Moan-முணங்கு
Mole-மறு
Money-மனவு, மணி
Mood-படி
Moor-முல்லை.
Moringa-முருங்கை
Mosquito, dim. of musca-மசகு
Moss-பாசி
Moth-மூட்டைப் (பாச்சா)
Mould-புழுதி
Mould-முழை. Mouldwarp-முழைவார்ப்பு
Mouth-மடை
Much-மிக
Mucus-மூக்கு
Mud-மண்
Mural *adj*. *L.* Murus-புரிசை
Murmur-முறுமுறு
Myth-மித்தை
Nacre, a white matter-நிகர்-ஒளி
Nadir-நாட-போல
Nag-நாகு
Nation-நாடு Native-நாட்டான்
Nature-நாற்றம். நாறு-தோன்று.
Navigate, *L.* Navis-நாவாய்; ago-உகை
Near-நெருங்கு
Need-நாடு
Nerve-நரம்பு
Nice-நயம்
Ninny-நன்னி
Nod-நடுங்கு
Nook-முக்கு



Note-நோடு. Notion-நோட்டம்
Nut-நெற்று
On-அண்-மேல்
One-ஒன்று
Opium-அபின்
Page-பாங்கன்
Page-பக்கம்
Pain-பையுள்
Palace-மாளிகை
Palaeology, *Gr.* Palaios-பழைய; logos-இலக்கம்
Palanquin-பல்லக்கு
Pan-பானை
Pandit-பண்டிதன்
Par-புரை-ஒப்பு
Passion-பாடு
Paste-பசை
Path-பாதை
Pathos-வாதை
Pave-பாவு
Peak-மூக்கு
Pawn-பணயம்
Pearl-பரல்
Pecuniary, *L.* pecu-பசு
Pedagogue, *Gr.* Paidos-பைதல்; ago-உகை
Peer-புரை-ஒப்பு, உயர்வு
Peril-பருவரல்
Perry Pear-பேரி
Pestle-முசலி-உலக்கை
Petal-மடல்-இதழ்
Petty-பிட்டு-சிறிய
Philology, *Gr.* philos-விழைவு; logos-இலக்கம்
Phonetic, *Gr.* phone-வாணி
Pick, syncope of பொறுக்கு
Piece-பிச்சு. பிய் + சு-பிய்ச்சு-பிச்சு
Pitcher-பத்தர்-குடம்
Place-வளாகம். (p=k)
Plain-வெளி
Plank-பலகை
Play-விளை(யாடு)
Plausible-பழிச்சவல்ல

"பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள்"
தொல். உரி. சூ. 84

Ply-வளை
Pock-பொக்குளம்
Poem-பா, பண்
Police, the system of regulations of a town. *Gr.* Polis-பாழி-நகர்
Polish-(பள) பளப்பு
Politics from polis
Polygon-பலகோணம்
Pool-பாழி-சிறுகுளம்
Pore-புரை-துளை
Port-புதவு
Portia-பூவரசு
Pot-பாண்டம்
Pouch-பொச்சு
Pour-வார்
Powder-பொடி
Practise-பழகு
Praise-பரசு
Prate-பிறைத்தி
Price-பரிசு. Prize-பரிசு
Pride-பெருமை
Puberty-பூப்பு, பூப்படைவு
Pulpit-பலிபீடம்
Pupa-பார்ப்பு
Pussy-பூசை-பூனை
Put-போடு
Putty-புட்டி
Puzzle-மசக்கு
Pyre-பொறி
Race-இராசி
Rajah-அரசன்

Red-இரத்த
Rice-அரிசி
Ring-கறங்கு
Roar-உராறு
Roll-உருள்
Round-உருண்ட
Rude-முரடு
Saccharine-சர்க்கரை
Sack-சாக்கு
Saddle-சேணம்
Sail-சேலை
Sake-சாக்கு
Salaam-சலாம்-வளைவு, வணக்கம்

"தந்தலை தாழ்தல் சலாஞ் செய்தல்"
உரிச்சொல் நிகண்டு

Saloon-சாலை
Sandal-சாந்தம்-சந்தனம்
Satan-சாத்தான்
Savour-சுவை
Scale-சிலும்பு
Sculpture-சிற்பம்
Semblance, *L.* similis-சமம்
Series, *L.* sero-சேர்
Sermon-சேர்மானம்
Serry-செறி
Serum-சீலம்
Shake-அசைக்கு for அசை (வடஆற்காட்டு வழக்கு)
Share-கூறு (sh=k)
Sharp-கூர்ப்பு(ஆன)
Shawl-சால்வை
Shell-சோழி
Sheet-சீட்டு
Shed-சிந்து
Shed-கொட்டு-கொட்டகை
Ship-கப்பல்
Shirt, a short garment-குட்டை
Shore-கரை
Short-குட்டை
Shrink-சுருங்கு
Sign-சின்னம்
Simile-சமம்
Sky-காயம்-ஆகாயம்
Slack-சுணக்கம்
Slave-சிலதி
Slip-சருக்கு
Slope-சரிவு
Smoke-புகை
Smooth-மெது
Snake-நாகம்
Sneak-நகர், to creep
Solar, adj. *L.* Sol-சூரன்
Sound-சந்தம்
Soup-சூப்பு
Speech-பேச்சு
Spire-புரி-வளைவு
Spot-பொட்டு
Spead-பரத்து
Spy-வேய்
Squash-கசக்கு
Squirrel, dim. of *Gr.* skiouros-கீரி
Star-தாரகை
Sugar-சர்க்கரை
Summit-சிமை

"ஆடுகழை நரலுஞ் சேட்சிமை"—
புறம். 120

Sup-சப்பு
Swear-சூள்
Taber, Tambour-தம்புரு
Tank-தாங்கல்-குளம்
Tarry-தரி
Teak-தேக்கு
Telephone-தொலைவாணி
Terminus-தீர்மானம்
Terrace-தளம்
Territory-தரைத்தலம்



Theology, *Gr.* theos-தெய்வம், logos-இலக்கம்
Thorough-துருவ
Thread-திரி
Thrive-தழை
Thrust-துருத்து
Till-தொள், to cultivate, to dig
Timid-திமிர்
Tire-அயர்
Tissue-தசை
Toleration-தாளுதல்-பொறுத்தல்
Tone-தொனி
Tract-திரை-இழு
Train-திரை
Transact, *L.* trans-துருவ, ago-உகை
Transparent-துருவிப் பார்க்கும்
Tree-தரு
Trick-திருக்கு
Trophy-திருப்பு
Truck-திரிகை, a wheel
Tube-தூம்பு
Turn-திரும்பு
Umber-அம்பர், ஒரு பிசின்
Vain-வீண்
Valiant-வலியுள்ள
Value-விலை
Vary-வேறு (படு)
Varnish-வண்ணம்
Vault-வளைவு
Vermicule, *L.* vermis-உலம் culus-குழவு
Very-உறு
Vest-வேட்டி
Victroy-வெற்றி
Viol, Violin, Low *L.* Vidula-விடலை
Vulture-வலசார்
Walk-ஒழுகு-நட
Wall, *L.* vallum-வாளம்
Want-வேண்டு
Wanton-வேண்டுமென்று செய்பவன்
War-போர்
Warm-உருப்-வெப்பம்
Wax-வீங்கு
Way-வாய்
Wet-ஓதம்
Wether-உதள்

"மொத்தையும் தகரும் உதளும் அப்பரும்
யாத்த என்ப யாட்டின் கண்ணே"
—தொல்-மரபு சூ 47

While-வேளை
White-வெள்ளை, வெட்டை
Wide-வீதி
Will-உள்ளம்
Wind-வளி
With-உடன்
Wonder-விந்தை
Worm-உலம்-புழு
Worth-பெறுதி
Yean-ஈன்
Yet-இன்னும்
Yoke-நுகம்
Yonder-ஆண்டை
Zenith-சென்னி

# பண்டைத் தமிழ்ச் சொற்கள்.

[மா. வே. நெல்லையப்ப பிள்ளை, B.A.]

## அடிகள் (௧௭)

பண்டைத் தமிழ் மக்கள், தாங்கள் வழிபட்ட கடவுளைக் குறிக்க, 'அடிகள்' என்ற சொல்லை வழங்கி வந்தார்கள். அவர்கள் ஏன் அச்சொல்லைக் கடவுளுக்கு வழங்கி வந்தார்களென்பதைப் பற்றி இக் கட்டுரையில் ஆராய்வாம்.

(2) ஒரு கூட்ட மக்கள் கடவுளை ஒரு பெயரினால் வழங்குதற்கு அடிப்படையாயுள்ளது அவர்கள் கடவுளைப்பற்றிக் கொண்ட கொள்கைகளே ஆகும். அக் கொள்கைகள் யாவை? கதிரோனும் அவனினின்றும் வேறாகாத ஒளியும்போலக் கடவுளும் அவனினின்றும் வேறாகாத அருளும் என்றும், கதிரோனொளி உலகி லெங்கும் நிறைந்திருத்தல்போலக் கடவுளினது அருளும் உலகிலுள்ள உயிர்ப்பொருளிலும் உயிரில் பொருளிலும் நிறைந்திருக்கின்றது என்றும், அந்த அருள் ஆற்றல் ஒன்றே உலகிற் பல வகையாய்ப் பல தத்துவங்களில் வெவ்வேறு பெயருடன் விளங்குகின்றது என்றும், பண்டைத் தமிழ் மக்கள் நன்கு அறிந்திருந்தார்களென்று பண்டைத் தமிழ் நூல்களால் நாம் அறிகின்றோம். ஏறக்குறைய 40, 50 ஆண்டுகளுக்கு முன்னே மேற்குநாட்டு இயற்கை ஆராய்ச்சியாளர்கள் வெப்பம், வெளிச்சம், மின்சாரம் (heat, light, electricity) முதலியவைகள் வெவ்வேறு சத்திகள் என்ற கொள்கையைக் கொண்டவர்களாயிருந்தார்கள். இப்பொழுது ஏறக்குறைய 45, 50 ஆண்டு காலமாகத்தான், அவர்கள் உலகில் விளங்கும் சத்து (energy) ஒன்றே என்றும் அந்த ஒரு சத்தியே பல வகையாய்ப் பலவகை மாயா தத்துவங்களில் விளங்கும்பொழுது வெப்பம், வெளிச்சம், மின்சாரம் முதலிய பல சத்திகளாய் விளங்கிப் பல பெயர்கள் பெறுகின்றது என்றும் முடிவு கட்டியிருக்கிறார்கள். நீண்ட காலத்துக்கு முன்னே, பண்டைத் தமிழ் மக்கள் இந்த உண்மையை அறிந்திருந்தார்கள்.



(3) இன்னும், பண்டைத் தமிழ் மக்கள் கடவுள் உருவமாவது அருவமாவது அருவுருவமாவது உடையனல்லனாயினும் உயிர்கள் தன்னை அறிந்து உய்யும்பொருட்டு, உருவப் பொருளிலும் அருவப் பொருளிலும் அருவுருவப் பொருளிலும் இயைந்து விளங்குகின்றான் என்ற உண்மையையும் அறிந்திருந்தார்கள். ஒரு சார்பு மக்கள் உருவம் அருவம் அருவுருவங்களுக்கு அப்பால் நிற்கும் கடவுளை, நாம் உருவ முதலிய பொருள்களில் வைத்து வழிபடுதல் அவனைக் குறைவு படுத்தலாகும் என்று கூறி, அவ் வழிபாட்டை இகழ்ந்து கூறுகிறார்கள். பண்டைத் தமிழ் மக்கள் இவ்வாறு கொள்ளாமல், "யாரொருவ ருள்குவா ருள்ளத் துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்" என்றும், 'ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன் புனத்தகத்தான்" என்றும் திருநாவுக்கரசு சுவாமிகளும், "மேலுலந்த தெக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்கள் செய்வார்க்கும், அக்கோலத் தவ்வுருவேயாம்" என்று காரைக்காலம்மையாரும் கூறிய வண்ணம் கடவுள் தன்னை அன்புடன் வழிபடும் மக்களுக்குப் பேரிரக்கத்தால் அவர்கள் தங்கள் தங்கள் அறிவுக்குத் தக்கபடி கொண்ட உருவ முதலானவைகளில், அருளாய் விளங்கி, அருள் செய்கின்றான் என்ற உண்மையை அறிந்திருந்தார்கள். இவ்வாறு கடவுள் உலகில் விளங்கும் தன்மை, அவனுடைய பொது இயல் என்று கூறப்படும். "வான்பிணிக டரும் வண்ணம் வானகமு மண்ணகமு மற்று மாகிப் பரந்தவண் காண்" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் கூறியபடி, கடவுள் உயிர்களைச் சார்ந்திருக்கிற மலப்பிணி தீரும்வண்ணம், உயிர்ப் பொருளும் உயிரில் பொருளும் அடங்கிய உலகில் விளங்குகின்றமையால், அவனை அவ்வாறு விளங்குகின்ற தன்மையில் மக்கள் வழிபடுதலே இயற்கைக்கு இணங்கியுள்ளது என்று அவர்கள் கண்டார்கள். விரிப்பின் உரை பெருகும்.

4. மேலே கூறியவாற்றால், கடவுள் உலகில் விளங்கித் தோன்றுதற்கு, அவனது அருளே காரணம் என்பதும், அவன் உயிர்கள் பொருட்டுக் கொள்ளும் உருவ வகைகளெல்லாம் அருள் உருவங்களே என்பதும் புலனாகும். "உருவென் றுண

(5) "ஆறு தங்கிய சடையரோ நமக் கடிகளாகிய அடிகளே"

சுந்தரமூர்த்தி சுவாமிகள், நமக்கடிகளாகிய அடிகள் தேவாரம்,
க - வது பாட்டு.

(6) "தட்டியாளவுங் கிற்பரோ நமக் கடிகளாகிய அடிகளே"

மேற்படி தேவாரம். 2-வது பாட்டு.

இந்தத் தேவாரப் பதிகம் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் நமக் கடிகளாகிய அடிகளே என்று கூறப்பட் டிருத்தல் காண்க.

(7) "அடிகளே யடியே னுதரித் தழைத்தா லதென்னுலோ வென் றருளாயே"

திருவாசகம், அருட்பத்து, ௯-வது பாட்டு.

(8) ஆளெம்மை யாளு மடிகளார் தங்கையில்"
திருவாசகம், அன்னைப்பத்து, 8-ம் பாட்டு.

7. இனி, அடிகள் என்ற சொல் கடவுளுக்கு வழங்கப்பட்டுவந்தபின்னர் கடவுட்டன்மையை அடைந்த பெரியார்களையுங் குறிக்க வழங்கப்பட்டு வருகின்றது. அடிகள் என்றசொல் இப்பொழுதும் பேச்சு வழக்கிலும் நூல் வழக்கிலுங் கடவுட்டன்மையையுடைய பெரியோர்களைக் குறிக்க வழங்கப்பட்டு வருகின்றது. ஆனாலும், அதற்குச் சரியான ஆரிய மொழியாகிய சுவாமிகள் என்ற சொல் தகுதியால் எத்தன்மையராயினும் கல்லாடை தரித்தவர்களையும், பிறப்பினால் ஆரியர்களையும், குறிக்க வழங்கப்பட்டு வருதல்போல அடிகள் என்ற சொல் வழங்கப்படுவதில்லை. அச்சொல், முதலாவது, சைவ சமயத்தாரால் வழங்கப்பட்டு வந்த பின், புத்த சமயத்தாராலும் புத்த சமயத் [illegible] குறிக்க [illegible]யேகலை சிலப்பதிகார நூல்களி[illegible] வழங்கப்பட்டு வந்தது.

199648

(தொடரு

# தோமாஸ் ஆல்வா எடிசன்

இவர் அமெரிக்காவில் 1847-ஆம் ஆண்டில் பிறந்து இன்னும் உயிரோடிருப்பவர். பத்திரிகை விற்கும் பையனாக இருந்து பார்புகழும் பதவியைப் பெற்றவர். ஊண் உறக்கமின்றி உழைத்துப் பெரும் புகழ் படைத்தவர். 'பெருமையுஞ் சிறுமையுந் தான்தர வருமே' என்ற பெரியார் திருமொழிக்கு எடுத்துக் காட்டாக விளங்குவது இவரது வாழ்க்கை வரலாறே.

இவருக்கு ஹென்ரி போர்டு மிகவும் நெருங்கிய நண்பராவர். இருவரும் ஒருவர்க் கொருவர் சிறந்த உதவி புரிந்து பெருஞ் செல்வர்களாய் விளங்குகின்றனர்.

மந்திரவாதி என்று பிறர் மதிக்குமாறு மின்சார அற்புதங்களை இயற்றியவர். தற்காலத் தந்தியைப் படைத்தவரும், மின்சார விளக்குகளை உலகெங்கும் பரவச் செய்தவரும் இவரே. பேசுந் தந்தியும், கம்பியில்லாத் தந்தியும், கண்டு பிடித்தவர் இவரே. பிரதி செய்யும் கருவியும், சட்ட மன்றத்தில் ஓட்டு எடுக்குங் கருவியும் செய்தவர் இவரே. மின்சார வண்டியும், இயங்கும் படமும் படைத்தவர் இவரே. பேசுங் கருவியை முதலில் இயற்றியவரும் இன்னும் எண்ணிறந்த புதுமைகளைக் கண்டுபிடித்து உலகில் அழியாப் புகழ் படைத்தவரும் இவரே.

இப்போது இவருக்கு வயது எண்பத்து நான்கு. எனினும் புதிது புதிதான கருவிகளை இன்னுங் கண்டுபிடித்துக்கொண்டே இருக்கின்றார். இன்றும் இவர் நாளொன்றுக்கு இரண்டு மூன்று மணிக்குமேல் உறங்குவதில்லையாம். இப்போது இலையிலிருந்து ரப்பர் எடுக்க முயற்சி செய்து வருகின்றாராம். ஒரே காலத்தில் ஆறு வகையான சோதனைகளில் கருத்தைச் செலுத்திக்கொண் டிருக்கிறாராம்.

இவரது வாழ்க்கை வரலாற்றால் நாம் அறியற்பாலன: "வறுமை தடையாகா?" என்பதும், "குன்றுஞ் சிறுமையும் பெருமைக்குத் தடையாகா" என்பதும், "ஊக்கமும் தளர்வு படா முயற்சியுமே வெற்றிக்குப் போகும் வழிகள்" என்பதும், "பிறப்பன்று, சிறப்பே நலந்தரும்" என்பதும், "தாயைப் போலவே பிள்ளை" என்பதும், ஆம்.

இவரது வாழ்க்கை வரலாறும், இவரது வாழ்க்கையில் இடையிடையே வருகின்ற மெய்க்கதைகளும், படிக்கப் படிக்க இன்பமாயிருக்கும். சுய ஆட்சி அண்மையிலிருக்கின்ற இக்காலத்தில் இத்தகைய பெரு நிபுணர் வாழ்க்கை வரலாறு போன்ற நூல் வெளிவருவது தமிழ் மக்கட்கு உற்றகாலத் துதவியதாகும். இத்தகையதொரு நூலே கல்லூரியின் மேல் வகுப்பு மாணவர்கட்கு இன்பமும் மனவெழுச்சியுந் தந்து நல்வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாகும்.

ஆதலால் தமிழுலகம் இந்நூலை நன்கு வரவேற்குமென்பதில் ஐயமில்லை. ஆப்டோன் படங்களுடன் பாய்பர் கட்டிடம் விலை அணு 12. ஆண்டிக் காகிதத்தில் அழகிய கட்டிட முடையது [redacted]லை ரூ. 1-4-0.